CONNEMARA PUBLIC LIBRARY

ஆரம்பக்கல்வி

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்

ஆசிரியர் : **பி. வீரராகவன்**

வருட சந்தா ரூ. 3.] [தனிப் பிரதி 4 அணா.

மலர் 15 } **பிப்ரவரி 1954** { இதழ் 2

ஏன் இந்தத் திட்டம்? என்ன பயன் இதனால்?

“எட்டுத் திக்கிலும் பரப்புவோம் எழில்மிகு ஆதாரக் கல்வியை!”

“ஓங்குக! ஓங்குக! ஆதாரக் கல்வி ஓங்குக!”

“எல்லாப் பள்ளிகளையும் ஆதாரப் பள்ளிகளாக மாற்றுவோம்!”

“எல்லோரும் வாருங்கள்! ஆதாரக் கல்வியைப் பரப்புவோம்!”

“அறிவை வளர்க்கும் கல்வி ஆதாரக் கல்வியே!”

இப்படியெல்லாம் இடிமுழக்கம் எழுப்பி வருகிறார்கள் ஒரு சிலர், சென்ற சில ஆண்டுகளாக.

அந்தச் சிலர், செல்வாக்கு உள்ளவர்களாகவும், ஆளும்கட்சியின் தூண்களாகவும் இருக்கும் காரணத்தால், அவர்களுடைய இந்த

முழக்கத்திற்கு அளவிற்கு அதிகமான விளம்பர ஒளியும்பத்திரிகை யில் இடமும் கிடைத்துவிடுகின்றன.

ஆனல், ஆதாரக் கல்வி-ஆதாரக் கல்வி என்று உரத்த குரலில் உலகறிய முழக்கமிடுகிருர்களே தவிர, ஆதாரக் கல்வி என்ருல் என்ன என்று கேட்டாலோ, திட்டவட்டமான விடையைக் கூறு வோர் ஒருவரையும் நாம் காணமுடியவில்லை.

குழந்தைகள் கையில் புத்தகங்களே இருக்கக்கூடாது-தாங்களா கவே அவர்கள் படித்துத் தேறி முன்னுக்கு வந்துவிட வேண்டும்— அதுதான் ஆதாரக் கல்வி என்கிருர்கள் சிலர்.

சம்பாதிப்பதின் மூலமாகவே கல்வி—Learning through Earning—குழந்தைகள் படிக்கும்போதே, அந்தப் படிப்பின் மூலமாகவே, அவர்கள் படிப்புக்குத் தேவையான அளவு பணத்தை யும் அவர்கள் சம்பாதித்து விடவேண்டும்—அதற்கு ஏற்றவகையில் வகுக்கப்பட்ட திட்டம்தான் ஆதாரக் கல்வி என்கிருர்கள். வேறு சிலர்.

வெறும் புத்தகப் பூச்சிகளாக இருந்து விடக்கூடாது சிறுவர் கள். தொழிற்கல்வியிலும் அவர்களுக்குப் பயிற்சி ஏற்படவேண்டும் இதுதான் ஆதாரக் கல்வியின் நோக்கம் என்று விளக்கவுரை பகர் கிருர்கள் இன்னும் சிலர்.

கல்வியறிவோ நம்நாட்டில் போதியஅளவு பரவவில்லை. அதைப் போதிய அளவு பரப்புவதற்குத் தேவையான பணமோ நம் அரசாங்கத்திடம் இல்லை. ஆகவே நம் நாட்டிற்குத் தேவைப் படுவது பணச்செலவே இல்லாத கல்வித் திட்டம். அத்தகு திட்டந் தான் நாங்கள் கூறும் ஆதாரக் கல்வி என்று புதிய கருத்துரை புகல் கிருர்கள் இன்னும் சிலர்.

கூடை முடைவது; பாய் பின்னுவது; மரம் அறுப்பது; நூல் நூற்றுத் துணி நெய்வது; இவற்றின் பெயர்தான் ஆதாரக் கல்வி என்று மட்டற்ற மகிழ்ச்சியுடன் ஆனந்தகீதம் பாடுகிருர்கள் மற்றும் சிலர்.

இவ்வாறு ஆளுக்கு ஒரு வகையாகவும்,வேளைக்கு ஒருவிதமாக வும், ஆதாரக் கல்வியைப் பற்றிய விளக்கம் தரப்படுகிறதே தவிர, இன்னதுதான் ஆதாரக் கல்வி—அதன் உருவம் இப்படித்தான் இருக்கும்—இன்னின்னவைதான் ஆதாரக் கல்வியின் திட்டங்கள்— இப்படி இப்படித்தான் அந்தக் கல்வியின் பகுதிகள் இருக்கும் என்று தெள்ளத் தெளிவாகவும், ஐயத்திற்கு இடமின்றியும், எடுத்துக் கூறும் ஆற்றல் படைத்தவர்கள் எவரையும், இதுவரை நாம் காணவுமில்லை; கண்டதாகப் பிறர் கூறக் கேட்கவுமில்லை.

"ஆதாரக் கல்வி என்றால் இன்னது என்பதைச் சரியாக அறிந்தவர் ஒரே ஒருவர்தான் இருந்தார்—அவரும் இறந்துபோய் விட்டார்—அவர் பெயர் தான் காந்தியடிகள்" என்று பிரபல வார வெளியீடு "கல்கி" முன்னர் ஓர் முறை தலையங்கம் தீட்டியிருந்தது. ஆதாரக் கல்வியைப்பற்றி எண்ணுகிறபோதெல்லாம் இந்தத் தலையங்கம்தான் நம் உள்ளத்தில் தோன்றுகிறது.

சின்னஞ்சிறு குழந்தைகள், தங்கள் கல்விக்குச் செலவாகும் தொகையை, தங்கள் உழைப்பின்மூலமே சம்பாதித்துவிட வேண்டும்— அப்படி உழைத்துச் சம்பாதிப்பதற்குப் பெயர்தான் ஆதாரக் கல்வி என்று கூறப்படுமானால், அத்தகு ஆதாரக் கல்வியை ஒழித்துக் கட்டுவதைவிட அவசரமான வேலை, இந்த நாட்டுக் கல்வி நிபுணர்களுக்கு வேறொன்று இருக்க முடியாது.

சின்னஞ்சிறு குழந்தைகளைக் கடுமையான வேலை செய்து சம்பாதிக்கும்படி உத்தரவிடுவது, பெருங்கொடுமை.

அதிலும் அப்படிச் சம்பாதிப்பதற்குப் பெயர்தான் கல்வி— அத்தகு கல்விதான் இந்நாட்டிற்குத் தேவை என்று இயம்புவது கொடிதினும் கொடிய மாபெருங் கொடுமை.

பதினான்கு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை வேலை செய்யும்படி வற்புறுத்துவது ஜீவகாருண்யமற்றசெயல் என்பதை அகில உலகமும் ஒப்புக்கொண்டு நீண்ட நாட்களாகிவிட்டன.

தப்பித் தவறி எந்த முதலாளியாவது தன் தொழிற்சாலையில் பதினான்கு வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டிருந்தால் அந்த முதலாளிக்குத் தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று உலக நாடுகள் அத்தனையும், சட்டம் இயற்றியும் எத்தனையோ ஆண்டுகள் ஆகிவிட்டன.

சின்னஞ்சிறு குழந்தைகளை வேலை செய்யும்படி வறுபுறுத்துவது தவறு—அக்கிரமம்—கொடுமை என்பதை மறுத்துக் கூறுகிற மனத்துணிச்சல் படைத்த அறிவாளிகள் இன்றையதினம் எவரும் கிடையாது.

அகல்மான முதுகிலேதான் பாரமான சுமையை வைக்க வேண்டும். தாங்கக்கூடிய தலையிலேதான் சுமக்கக்கூடிய பளுவை ஏற்றவேண்டும். சின்னஞ்சிறு குழந்தைகளின் தலை மீதோ முதுகின்மீதோ பாரமான மூட்டையை ஏற்றி வைத்துச் சுமந்திடுக என்று பணித்திடக்கூடாது. பணித்திடுவது அறிவுடைமையுமல்ல, அது நடை பெறக்கூடிய செய்கையும் ஆகாது.

நிமிர்ந்த மார்பும் திரண்ட தோளும் முறுக்கேறிய மீசையும் பக்குவமான வயதும்படைத்த கட்டிளங்காளைகளைத் தொழில்புரியும்படி வற்புறுத்தலாம்—அது நியாயம். கல்லூரியில் படிக்கும் மாணவர்களையும், உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் இளைஞர்களையும் தொழிற் கல்வி கற்கும்படி கட்டாயப்படுத்தலாம்—அது முறை. தங்கள் கல்விக்குத் தேவையான பணத்தில் ஒரு பகுதியை, அந்தக் கல்வியின் மூலமாக அல்ல, அவர்களுடைய ஓய்வு நேரத்தில் வேறு ஏதாவது ஒரு வேலையைச் செய்வதன் மூலமாகச் சம்பாதிக்க வேண்டும் அந்த இளைஞர்கள் என்று நாம் எதிர்பார்க்கலாம்—அதிலே குற்றமில்லை. ஆனால், ஆரம்பப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளை, ஆறு ஏழு எட்டு என்கிற இத்தகு வயது படைத்த முல்லை அரும்புகளை, அன்றலர்ந்த செந்தாமரைகளெனக் காட்சி தரும் "சின்னஞ் சிறுசு"களைக் கடுமையான தொழில்கள் எனும் இயந்திரத்தில் போட்டு வாட்டுவது, நியாயமுமல்ல; நேர்மையும் ஆகாது; நாட்டு வளர்ச்சிக்கான நற்பணியும் அன்று; கல்வித் துறையைச் சிறப்புறச் செய்யும் செய்கையும் அது அல்ல.

பதினன்கு வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை வேலைசெய்யும்படி வற்புறுத்துவது இந்திய சமுதாயத்துக்கே அவமானம் என்பதை நன்ருக அறிந்த காரணத்தால்தான், இந்திய அரசாங்கத்தார், பதினன்கு வயதுக்கு உட்பட்டவர்களை எவரும் எந்தத் தொழிற் சாலையிலும் வேலைக்கு அமர்த்திக் கொள்ளக் கூடாது என்று சட்டம் இயற்றியிருக்கிருர்கள். மீறி அமர்த்துபவர்களுக்குத் தண்டனையும் தந்துவருகிருர்கள்.

பதினன்கு வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள், தொழிற்சாலைகளில், தொழில் என்கிற பெயரால், சம்பளம் வாங்கிக்கொண்டு பணி புரிவதே தவறு என்று சட்டம் இருக்கிறபோது, அதே சிறுவர்கள், அதே தொழிலை, தொழிற்சாலைகளுக்குப் பதிலாகப் பள்ளிக்கூடங்களில், தொழில் என்கிற பெயரில் இல்லாமல் தொழில் கல்வி என்கிற சற்று நீண்ட பெயரில் செய்வதால்மட்டும், அது எப்படி நியாயமானதாக மாறிவிடமுடியும்?

ஆகையால்தான் கூறுகிருேம்—ஆதாரக் கல்வி என்கிற பெயரைச் சொல்லிக்கொண்டு, சின்னஞ் சிறு குழந்தைகளைக் கடுந் தொழில் செய்யும்படி வற்புறுத்துவது குற்றம், குற்றம் என்று!

சின்னஞ்சிறு குழந்தைகளைத் தொழில் புரியும்படி வற்புறுத்துவதுமட்டுமல்ல, அவர்கள் அப்படிச் செய்யும் தொழிலிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டே, அவர்கள் படிக்கும் பள்ளிக்கூடத்தின் எல்லாச் செலவுகளையும் நிறைவேற்றியாக வேண்டும் என்று ஆதாரக் கல்வித் திட்டம் எதிர்பார்க்கிறது.

இது, நடக்கிற காரியமா? அப்படியே நடக்கிற காரியமாக இருந்தாலும், இதற்குப் பெயர் கல்வியா?

பள்ளிக்கூடத்தில் குழந்தைகள் தொழில் புரியவேண்டும்—அந்தத் தொழிலிலிருந்து கிடைக்கும் பண்டங்களை மார்க்கெட்டில் விலைகூறி விற்கவேண்டும்—அப்படி விற்றுக் கிடைக்கும் பணத்திலிருந்து ஆசிரியர்கட்குஊதியமும் பள்ளிக்கூடத்தை நடத்துவதற்குத் தொகையும் கிடைக்கவேண்டும் என்று எதிர் பார்ப்பதைவிடப் பெருந்தவறு வேறென்ன இருக்க முடியும்?

சென்ற பல ஆண்டுகளாக இந்த நாட்டில் எத்தனையோ பள்ளிக்கூடங்களில் ஆதாரக் கல்வித் திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. ஆனால் எந்தப் பள்ளிக்கூடத்திலேயும், அந்தப் பள்ளிக்கூடத்தை நடத்துவதற்குத் தேவையான செலவு முழுவதையும், பள்ளியிற் பயிலும் குழந்தைகளின் தொழிலிலிருந்தே கண்டெடுக்க முடிந்ததாகத் தெரியவில்லை.

ஒரே ஒரு பள்ளிக்கூடத்தில்கூட, பள்ளிச் சிறுவர்கள் செய்த பண்டங்களின் விற்பனைத் தொகையிலிருந்தே அந்தப் பள்ளிக்கூடத்தை நடத்த முடிகிறது என்கிற நிலை ஏற்படவில்லை.

எல்லாப் பள்ளிக்கூடங்களும் அரசாங்கத்தின் உதவித்தொகையையும் பெற்றோர்கள் கட்டுகிற சம்பளத் தொகையையும் கொண்டுதான் நடத்தப்படுகின்றனவே தவிர, இந்த இரண்டு தொகைகளையும் வேண்டாம் என்று கூறிவிட்டு, மாணவர்கள் சம்பாதிக்கிற தொகையைக் கொண்டே எந்த ஒரு பள்ளியும் நடைபெறவில்லை.

இதுதான் ஆதாரக் கல்வியின் நோக்கம் என்றால், ஆதாரக் கல்வி முழுத்தோல்வி அடைந்து விட்டது என்பதை நாம் நிச்சயமாகக் கூறமுடியும்.

இதுவரை ஆதாரக் கல்வித் திட்டம் தோல்வியையே தொடர்ச்சியாகக் கண்டு வந்திருக்கிறது.

ஆனால் அது அப்படியில்லாமல், வெற்றி பெறுகிறது என்று வாதத்திற்காகக் கற்பனை செய்து கொண்டு பார்த்தாலும், அந்த வெற்றியால், கல்வித் துறைக்கு நஷ்டமே தவிர லாபம் என்ன?

ஆதாரக் கல்வி வெற்றிபெற வேண்டுமானால், பள்ளிக்கூடச் செலவுக்கான முழுத் தொகையை அல்லது அதில் ஒரு பெரும் பகுதியை, பள்ளிச் சிறுவர்களின் தொழில்களிலிருந்து நாம் பெற்றாக வேண்டும். ஆனால் அத்துணைப் பெருந்தொகை பள்ளிச் சிறுவர்களின் தொழில்களிலிருந்து கிடைத்தாக வேண்டுமானால், அந்தக்

சிறுவர்கள் நாள் முழுவதும் ஓயாமல் உழைத்தாக வேண்டும். ஆனால் அவர்கள் அப்படி உழைப்பது என்று தொடங்கி விட்டால், உழைத்து உழைத்து உருமாறுவதற்குத் தான் அவர்களுக்கு நேரம் இருக்க முடியுமே தவிர, தாய்மொழி, வரலாறு, விஞ்ஞானம், நில நூல், கணக்கு முதலிய அறிவுத்துறைக் கல்வியைப் பெறுவதற்கு அவர்களுக்கு ஓய்வு எங்கிருந்து கிடைக்க முடியும்?

ஆகவே, ஆதாரக் கல்வித் திட்டம் வெற்றி பெற்று விட்டது என்கிற நிலை உருவாக வேண்டுமானால், பள்ளிக்கூடங்கள், பள்ளிக் கூடங்களாக இருக்கக் கூடாது தொழிற்சாலைகளாக மாறிவிடவேண் டும். ஆனால் பள்ளிக்கூடங்கள் தொழிற்சாலைகளாக மாறி, மாணவக் குழந்தைகள் உழைக்கும் பாட்டாளிகளாகப் புதுநிலை பெற்றுவிட் டால், அந்த நிலையில் அவர்கள் பெறுகிற பயிற்சிக்குப் பெயர் கல்வி என்று எப்படி இருக்க முடியும்?

அது மட்டும் அல்ல.

ஆரம்பக் கல்வியைப் புகட்டுவதற்குத் தேவைப்படும் பணத்தை எங்களால் தேடித்தர இயலாது—அதனை, அந்தக் கல்வியைப் பயில் கிற சின்னஞ் சிறு குழந்தைகளே தான் தங்கள் தனி முயற்சியின் மூலமாகத் தேடிக் கொள்ளவேண்டும் என்று இந்த நாட்டு அரசாங் கமோ அல்லது சமுதாயமோ கூறுவதாக இருந்தால், இதைவிட அவமானத்தைத் தருகிற நிலை, இந்த நாட்டு அரசாங்கத்துக்கோ சமுதாயத்திற்கோ வேறென்ன இருக்கமுடியும்?

இங்கிலாந்து, அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் முதலிய முன் னேற்றமடைந்த நாடுகள் அத்தனையிலேயும், அந்தந்த நாட்டு அரசாங் கங்கள் தான், அந்தந்த நாட்டு ஆரம்பப் பள்ளிகளை நடத்துவதற்குத் தேவையான முழுச் செலவையும் ஏற்றுக் கொள்கின்றன. அங்கெல் லாம் நிலைமை இப்படி இருக்கும்போது, இந்த நாட்டிலே மட்டும் நாம், சிறு குழந்தைகளுக்குக் கல்வி யூட்டும் பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. அதனை அந்தக் குழந்தைகளே தான் ஏற்றுக் கொண்டாக வேண்டும் என்று கூறுவதாக இருந்தால், இத னைக் கேட்டுப் பிற நாட்டார் கைகொட்டி நகைக்க மாட்டார்களா?

ஆகவே, எந்தக் கண்ணோட்டத்தைக் கொண்டு பார்த்தாலும் சரியே, ஆதாரக் கல்வி என்கிற ஏற்பாடு, அர்த்தமுமற்றது—அதற்கு அவசியமுமில்லை என்கிற முடிவு ஏற்படாமல் போகாது.

சிந்தித்தும் பார்க்கும் தைரியமும், அந்த சிந்தனையின் முடிவுப் படி நடக்கும் நேர்மை உணர்ச்சியும் படைத்த நல்லறிவாளர்கள் எவரும் இந்த நன்முடிவுக்குத்தான் வருவர்.

அப்படித்தான் வந்திருக்கிறார் சர் மிர்சா இஸ்மெயில்—தலை சிறந்த நிர்வாக நிபுணர்.

நாட்டு ஆட்சி, கல்வித்துறை, பொருளாதார அனுபவம் ஆகிய பல துறைகளிலேயும் ஆழ்ந்த புலமையும் தேர்ந்த பயிற்சியும் படைத்தவர் சர் மிர்சா.

அத்தகு பேரறிஞர், ஜனவரித் திங்கள் ஒன்பதாம் நாளன்று, ராஜபுதனப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவை ஆற்றி, அரியதோர் விரிவுரை ஒன்றை வழங்கியிருக்கிறார்.

அந்தச் சொற்பொழிவில் அவர் ஆதாரக் கல்வியைப் பற்றித் தெரிவித்துள்ள சில கருத்துக்கள் நம் சிந்தனைக்கு விருந்தாகவும், சிலர் இத்துறையில் கொண்டுள்ள தவறான நினைப்புகட்கு ஒரு மருந்தாகவும் அமைந்துள்ளன.

"ஆதாரக் கல்வித் திட்டத்தின் அடிப்படை நோக்கங்கள், நாகரிக வாழ்வுக்கு ஒவ்வாதவை என்றே எனக்குத் தோன்றுகின்றன."

"அந்தத் திட்டத்தின் முதன்மையான நோக்கங்கள் இரண்டு என்று நான் கருதுகிறேன். ஆரம்பப்பள்ளி மாணவர்கள் ஏதாவது ஒரு தொழில் செய்வதன் மூலமாகத்தான் கல்வியைக் கற்றுக் கொள்ளவேண்டும் என்பதும், அப்படிச் செய்யப்படும் பண்டங்களை விற்று, அந்தப் பணத்தைக் கொண்டு பள்ளிச் செலவைச் சரிக்கட்ட வேண்டும் என்பதும் ஒரு நோக்கம். புத்தகங்களின் மூலமாகப் பெறுகிற கல்வியை மிகவும் குறைந்த அளவினதாக ஆக்கிவிட வேண்டும் என்பது மற்றொரு நோக்கம்."

"இந்த இரண்டு நோக்கங்களுமே நாகரிக உணர்ச்சிக்கு ஏற்றன அல்ல என்பது என் கருத்து."

"பள்ளிக் குழந்தைகளைத் தொழிற்சாலைப் பாட்டாளிகளாக மாற்றும் இச்செயலுக்குக் கல்வி என்கிற பெயர் நிச்சயமாகப் பொருந்தாது."

"ஆரம்பக் கல்விக்குத் தேவைப்படும் பணத்தை அரசாங்கம் தான் தரவேண்டுமே தவிர அதனை, பள்ளிச் சிறுவர்களின் தொழில்கள் மூலமாகத் திரட்ட முயல்வது முறையான செயல் அல்ல."

"ஏதாவது ஒரு கைத் தொழிலை, வியாபார நோக்கம் இல்லாமல், பொதுக் கல்விக்கு இடையூறு ஏற்படாத வகையில், சிறிதளவு சொல்லித் தருவதில் தவறில்லை. ஆனால் கல்வியின் பெரும் பகுதி, கிண்டர் கார்டன் என்கிற அந்த ஒரு நிலையைத் தவிர, ஏனைய எல்லா

நிலைகளிலும், புத்தகங்களின் மூலமாகத்தான் புகட்டப்பட்டாக வேண்டும்.''

"புத்தகக் கல்வியை எதிர்த்து எழுப்பப்பட்ட கிளர்ச்சி அளவுக்கு மீறி வளர்ந்து விட்டது என்பதை அறிந்து, மீண்டும் புத்தகக் கல்விக்கு ஆதரவாகக் கிளர்ச்சி செய்யும் நிலை மேல் நாடுகளில் ஏற்பட்டிருக்கிறது.''

"இத்தகு சமயத்தில் நாம் புத்தகக் கல்வியை அடியோடு வெறுக்கும் பிரசாரத்தை வேகவேகமாகத் தொடங்குவது நியாயமல்ல.''

சர் மிர்சா இஸ்மெயில் தந்துள்ள கருத்துரைகளில் சில, இவை.

ஆதாரம் இல்லாத ஆதாரக் கல்வியை, அது அவசியமற்றதோர் ஆபத்து என்பதை அறியாமல், இன்னமும் ஆதரித்துக் கொண்டிருக்கும் ஒரு சிலர், இந்த அரிய கருத்துகளை நிச்சயம் படித்துப் பார்க்க வேண்டும்.

படித்தால் மட்டும் போதாது; சிந்தித்தும் ஆகவேண்டும்.

சிந்தித்துப் பார்த்து, அந்த சிந்தனையின் முடிவை ஒளிக்காமல் கூறுகிற நற்பண்பையும் அவர்கள் கையாளத் தொடங்கினால், ஆதாரக் கல்வித் திட்டத்தை நம் நாடு உடனே கைவிட்டாக வேண்டும் என்கிற முடிவை, அவர்களும் எடுத்துக் கூறாமல் இருக்க முடியாது.

தமிழ்மொழியை ஆட்சிமொழி ஆக்குவோம்!

திருவாளர் கஜபதியின் முழக்கம்

தமிழ் ஆட்சிமொழி மாநாடு, சென்னை அண்ணாமலை மன்றத்தில் 20–12–1953 ஞாயிறு அன்று, நடைபெற்றபோழ்து தலைமைதாங்கிய ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி, மேல்சபை உறுப்பினர் **திரு. ஆ. கஜபதி நாயகரவர்கள்**, பி.ஏ., பி.எல்., எம்.எல்.சி., ஆற்றிய தலைமைப் பேருரையின் சில பகுதிகள் பின்வருமாறு:

* * *

தமிழ்ப்பெருமக்களே!

சென்னை மாகாணத்திற்குச் சென்னியாய் விளங்கும் சென்னையம்பதியில், இன்று கூடும் "தமிழ்மொழி ஆட்சி மாநாட்டுக்குத் தலைமை தாங்கித் 'தமிழ்ப் பணி ஆற்றுக" என்று பணித்தருளிய சென்னைமாகாணத் தமிழ்ச்சங்கத்தாருக்கு என் வணக்கமும், நன்றியும் உரித்தாகுக.

தென் இந்தியப் பகுதியில் நான்கு மொழிகளைப் பேசுகிறார்கள். அம்மொழிகள் முறையே **தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம்**. இம்மொழிகள் நான்கும் திராவிட மொழிகளாதலால் இம் மொழி பேசுகிறவர்களைத் **திராவிட மக்கள்** என்பர். இவர்கள் தென்னாட்டில் ஒவ்வொரு தனித்த. குறிப்பிடத்தக்க பகுதிகளிலே வாழ்ந்து வருவதையும் பார்க்கலாம்.

இப்போது ஆந்திரமக்கள் பிரிந்து ஆந்திர நாட்டை அமைத்துக்கொண்டார்கள். அவர்கள் பேசும் மொழியாகிய தெலுங்கு அந்நாட்டிலே ஆட்சிமொழியாக விளங்குகிறது. சட்ட மன்றங்களிலும், வழக்கு மன்றங்களிலும் கல்விக் கழகங்களிலும், பிற எல்லாத் துறைகளிலுமே தெலுங்கு பேசப்பட்டும், எழுதப்பட்டும் வருகின்றது. ஆயினும் இங்கு ஒன்று கவனிக்க வேண்டும். ஆந்திரநாடு முழுவதிலும் தெலுங்கு பேசும் மக்கள் மாத்திரம் இல்லை. தமிழ் பேசும் மக்களும் இருக்கிறார்கள். தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாகச் சித்தூர் முதலிய எல்லைப் பகுதிகளில் குடியிருக்கிறார்கள். இம்மாதிரி வேறு மொழி பேசும் மக்கள், நாட்டிற்குள் இருந்தாலுங்கூட, தெலுங்கு மொழி ஆட்சிமொழியாய் நடைபெறுகின்றது. ஏனெனில் பெரும்

CONNEMARA PUBLIC LIBRARY

பான்மையாகத் தெலுங்குபேசும் ஆந்திரமக்களே ஆந்திர நாட்டில் வாழ்வதால், தெலுங்கு ஆட்சி மொழியாக இடம் பெற்றிருக்கின்றது.

ஆந்திரநாடு பிரிந்ததுபோக, இப்போது இருக்கும் சென்னை மாகாணம், பெரும்பான்மையும் தமிழ் பேசும் தமிழ் மக்கள் கொண்ட நாடாக இருக்கிறது. 14-மாவட்டங்கள் கொண்ட இம் மாகாணத்தில், 12—மாவட்டங்கள் முழுவதும் தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்றார்கள். சிறு பகுதியான "மலபார்" என்னும் பெயர் கொண்ட மாவட்டத்திலும், "கன்னடம்" என்று பெயர் கொண்ட மாவட்டத்திலுமே மலையாள மக்களும், கன்னட மக்களும் வாழ்கிறார்கள். எவ்வாறு தமிழ்மக்கள் ஆந்திரநாட்டு எல்லைப் பகுதியாகிய சித்தூர் மாவட்டத்தில் வாழ்கிறார்களோ, அதே போல் இம்மலையாள மக்களும், கன்னட மக்களும், தமிழ் மாகாண எல்லைப்புறங்களில் இருக்கிறார்கள்.

இப்போது இம்மாநாட்டில் நாம் கேட்பது, "சென்னை மாகாணப் பெரும்பான்மைப் பகுதியில் தமிழ் பேசும் மக்களே இருக்கிறார்கள். ஏன் தமிழ்மொழியை ஆட்சிமொழியாகச் செய்யக் கூடாது? இதற்கு என்ன தடைகள்?"

நம்மில் சிலர் சொல்லுவர்: "நாமெல்லாம் சட்டசபைகளிலும் நீதிமன்றங்களிலும் மற்ற நகராண்மை நாட்டாண்மைக் கழகங்களிலும் தமிழில்தானே பேசுகிறோம். இதற்கு யாரும் தடை சொல்லவில்லையே? ஆகையால் இம்மாதிரியாகவே தமிழில் நடத்துவோம். பின், சட்டப்படி மொழிவாரி நாடுகள் பிரிக்கப்பட்டால் அந்தந்த நாடுகளில் அவ்வம் மொழிகளை ஆட்சி மொழியாய்ச் செய்துகொள்ளலாம். அப்போது வேறுமொழி பேசும் மக்கள் அந்நாட்டிடை இருந்தாலும் அவர்களால் ஒரு தடையும் ஏற்படாது; அப்படிச் செய்வது தானே நல்லது."

இந்தப் பேச்சின் திறத்தை ஆராய்வோம்: தமிழ் மக்கள் இப்போது தமிழ்நாடு என்ற ஒரு நாட்டை வரையறுக்க வேண்டும் என்று கேட்கவில்லை. அதற்கெனச் சட்டம் செய்து ஆந்திர நாட்டைப்போல் ஒரு நாட்டை வகுத்துக் கொடுக்கவேண்டுமென்றும் கேட்கவில்லை. மேலும் மொழிவாரியாக ஒரு நாட்டைப் பிரித்த பிறகுதான் ஒரு மொழியை அந்நாட்டிற்கு ஆட்சி மொழியாகச் செய்விக்கவேண்டும் என்று, ஒரு சட்டமும் விதிக்கவில்லை. ஒரு நாட்டுப் பகுதியைத் தனி நாடாக அமைக்க வேண்டுமென்றால் சட்டப்பிரிவுகள் 2, 3-ன்படி நடத்த வேண்டும். ஆகையால், நாடு பிரிக்கத் தனிச் சட்டம் இருக்கிறது. அதேபோல் **நாட்டு மொழிகளை ஆட்சி மொழிகளாக ஆக்குவிக்க, அதற்கெனத் தனிச் சட்டப் பிரிவுகள் இருக்கின்றன.**

இவை இரண்டிற்கும் யாதொரு தொடர்பும் இல்லை. இப்படி யிருக்க, மொழிப்பேச்சோடு நாடு அமைக்கும் பேச்சை இணைப் பது, குழப்பத்தை உண்டாக்குவ தாகும்.

சென்னை மாகாணத்தில் பெரும்பகுதிகொண்ட தமிழ் மாவட்டங்களில் வாழும் மக்கள், தாங்கள் வாழும் நிலப்பகுதியை, தமிழ்நாடு என்று பெயரிட்டுக் கொள்ளவும், தங்கள் மொழியை ஆட்சிமொழியாய்ச் செய்வித்துக் கொள்ளவும் உரிமையுண்டு. அவ் விதம் செய்வது கூடாது என்று, சிறு பகுதி மாவட்டங்களிலிருக் கும் மலையாள மக்களும் கன்னட மக்களும் தடுக்க ஒருவித நியாய மும் சட்டமும் இல்லை. இதை அறிந்தே அம்மக்கள் ஒன்றும் பேசாது இருக்கிறார்கள். அப் படியிருக்க நாமாகவே, மலையாள கன்னடப் பகுதிகளைப்பற்றிப் பேசுவது, குட்டிக்கலகம் செய் வதுபோலாகும்.

மேலும் தமிழ் மொழியை ஆட்சிமொழியாய்ச் செய்விப்பது தமிழ் மாவட்டங்களுக்குள் மட் டும்தான். மற்ற மலையாள கன் னட மாவட்டங்களில் தமிழை ஆட்சிமொழியாகப் புகுத்த வில்லை. முன்போலவே அப் பகுதிகளில் அம்மொழிகள் வழங் கும். ஆங்கிலமொழி அரசு மொழியாய் இருக்கும். பின் னிட்டு மொழிவாரியாகத் தம் நாடுகளோடு சேரும்போது, தம் தாய்மொழிகள் ஆட்சி செய்யும். ஆகையால், இப்போதிருக்கும் சென்னை மாகாணத்தை ஒரு தனி மாகாணமாக்கச் சட்டம் செய்ய அவசியமில்லை. தனி மாகாணமாகவே இருக்கிறது. அதற்குத் தமிழே ஆட்சிமொழி யாகும்.

வடதிசையிலிருந்து சில மிரட் டுப் பேச்சுக்கள் வருகின்றன. "ஆந்திரநாடு ஒன்றுதான் அமைத்தோம். வேறு தனி நாடுகளை அமைக்கமாட்டோம்; இன்னும் 10 ஆண்டுகள் கடக்க வேண்டும்" என்று சில அதிகாரி கள் பேசுகிறார்கள். ஆனால், அது வரைக்கும் நாம் வாய்மூடிக் கொண்டு வாளா இருப்பதா? சட்டப்படி தமிழை ஆட்சிமொழி யாய்ச் செய்விக்க உரிமை இருக் கும்போது, அவ்வுரிமையை, இன் னும் மலையாளநாடு, கன்னட நாடு அமைக்கவில்லை யென்று சொல் லிப் பறிக்கமுடியுமா? முடியாது.

தமிழை ஆட்சி மொழியாய்ச் செய்வித்தால் பணச் செலவு ஆகும் என்கிறார்கள். இஃ தென்ன பேச்சு? தமிழர்கள் கொடுக்கும் வரிப்பணம் தமிழர் களுக்குச் செலவு செய்யத்தானே இருக்கிறது. வீண்பேச்சுக்கள் பேசி மதிமயக்க வேண்டாம். நல்ல எண்ணத்தோடு தமிழை ஆட்சிமொழியாக்க எல்லோரும் ஒருமனப்படுவோம்.

இக் கருத்தைச் சட்டப்படி விளக்கஞ் செய்வோம். அரசியல் அமைப்புச் சட்டத்தில் (The Constitution of India) 8வது அட்டவணையில் 14–மொழிகள்

காணப்படுகின்றன. அவையாவன: அஸ்ஸாமி, பெங்காலி, குசராத்தி, இந்தி, கன்னடம், காச்மீர், மலையாளம், மராத்தி, ஒரிசா, பஞ்சாபி, சான்ஸ்கிரிட், தமிழ், தெலுங்கு, உருது—இம் மொழிகள் நாட்டு மொழிகள் என்றுவது அல்லது ஆட்சி மொழிகள் என்றுவது பெயர் கொடுக்கப்படாமல் பொதுவாக "மொழிகள்" என்ற பெயரளவில் குறிப்பிடப்பட்டு இருக்கின்றன.

மொழிகளைப் பற்றிய சட்டப் பிரிவுகள் 210, 343 முதல் 349 வரையாகும்.

இவைகளை ஆராய்வோம்:

343 பிரிவுப்படி தேவநாகரி எழுத்துக்களைக் கொண்ட இந்தி மொழி ஒன்றே இந்தியப் பேரரசுக்குச் (Indian Union) சட்டப்படி ஆட்சி மொழியாகச் செய்யப்பட்டிருக்கிறது. வேறுமொழிகளை இந்தியப் பேரரசுக்கோ, அல்லது மாகாணங்களுக்கோ, ஆட்சி மொழிகளாகச் செய்யப்படவில்லை. மேலும் 343 பிரிவு விதிப்பது: "இந்தி ஆட்சிமொழியாய் இருப்பினும் இன்னும் 15 ஆண்டுகளுக்கு ஆங்கில மொழியே அரசியல் அலுவல்களுக்கு முன்போலப் பயன்படுத்தப்படும்." ஆகையால் ஆங்கில மொழி ஓர் ஆட்சிமொழி அன்று. அது ஒரு (authorised) தற்காலிக மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது; 15 ஆண்டுகளுக்குப் பின் அது நில்லாது நீங்கி விடும்.

இந்தி மொழியைப் பலவிதத்தாலும் வளர்ப்பதற்கென 344-ம் பிரிவு சட்டம் வகுக்கிறது. அதாவது இந்தி மொழியை மேன்மேலும் இந்தியப் பேரரசுக்கு ஆட்சி மொழியாய் இருக்க வேண்டி வளம்படுத்துவது (a) ஆங்கில மொழியை அரசியல் ஆட்சியிலிருந்து எவ்வாறெல்லாம் குறைத்துக் கொள்வது. (b) உயர் நீதி மன்றங்களில் எந்த மொழியை, 348–வது பிரிவுப்படி கையாள வேண்டுவது. (c) பேரரசுக்கும் ஒரு மாகாணத்திற்கும் இடையேயும் எந்த மொழியைத் தொடர்பு மொழியாக (for communication) ஆக்க வேண்டியது,—இவை எல்லாம் ஆராய்ச்சி செய்ய ஒரு மொழிவாரிக் கமிஷனும் அதன் சிபார்சுகளை ஊன்றி ஆராய்ந்து சனாதிபதியிடம் அறிக்கை (report) செய்ய ஒரு பார்லிமெண்ட் கமிட்டியும் அமைக்கச் சட்டம் செய்திருக்கிறது. ஆனால், நாட்டுமொழிகளை வளர்க்கவோ அல்லது காக்கவோ ஒரு சட்டமும் செய்யப்படாமலிருக்கிறது.

இவ்வாறு இந்திமொழிக்கும் தேவநாகரி எழுத்துக்கும் 343, 344, பிரிவுகள் சட்டம் செய்திருக்க, ஏனைய 12 மொழிகளுக்குப் பிரிவுச்சட்டங்கள் 210, 345, 346, 347, 348 என்ன விதிக்கின்றன என்பதைக் கவனிப்போம்.

பிரிவுச் சட்டம் 210 சொல்லுவது: ஒரு நாட்டுச் சட்டசபை

யின் நடைமுறை வேலைகள் (Business in the Legislature of the State) அந்நாட்டின் ஆட்சிமொழியிலாவது (official language) அல்லது இந்திமொழியிலாவது அல்லது ஆங்கில மொழியிலாவது நடைபெறும். இம் மொழிகளில் விளக்கமாகப் பேச இயலாத சட்டசபை அங்கத்தினர், சபாநாயகரின் அனுமதி பெற்றுத் தம்தம் தாய்மொழியில் பேசலாம்.

இப்போது நமது சட்டசபையைக் கவனிப்போம். அங்கே ஆங்கிலத்தில்தான் நடைமுறைகள் (Business in the Legislature) அச்சிடப்பட்டிருக்கின்றன. அமைச்சர்கள் பேசுவது ஆங்கிலமொழியில்தான். ஏனைச் சட்டசபையினர் ஆங்கிலத்திலும் தமிழ், மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளிலும் பேசுகிறார்கள். நாம் முதலாவதாகக் கேட்கலாம். அச்சிட்டு வழங்கும் நடைமுறைகளைத் தமிழில் அச்சிட்டு வழங்குவார்களா? தமிழில் அச்சிட்டால் மற்ற மொழிகளிலும் கேட்போருக்கு அச்சிட்டு வழங்க வேண்டிவருமே என்று சிலர் உரைப்பார்கள். ஆனால், தமிழ் மொழியை ஆட்சிமொழியாய்ச் செய்வித்திருந்தால்இந்தவினாவே எழாது. ஆங்கிலமொழி அரசு மொழியாய் (Aut horised) விதிக்கப்பட்டு இருப்பதால்தான் ஆங்கிலத்தில் அச்சிடப்படுகிறது. தமிழ் ஆட்சிமொழியாய்ச் செய்விக்காத காரணத்தால் அது தமிழில் அச்சிடப்படவில்லை.

210 பிரிவின் 2-வது உட்பிரிவு சொல்வதாவது: "ஒரு நாட்டுச் சட்டசபை ஆங்கில மொழியை நீட்டிக்காது விட்டு விட்டால் 15 ஆண்டுகளுக்கு இறுதியில் ஆங்கிலமொழி மாண்டதாகக் கருதப்படும்." ஆகையால் இச்சட்டப்படி ஆங்கிலத்திற்கு ஒரு காலவரையறை உண்டு. இதற்குப் பிறகு இந்தி மொழி நாட்டுக்குள் முதல் இடம் பெறும்; ஏனெனில் இப்போதுள்ள சட்டப்படி நம் நாட்டில் தமிழ்மொழியை ஆட்சிமொழியாகச் செய்யாது இருப்பதால்.

345 பிரிவு சொல்லுவது என்னவென்றால்—ஒரு நாட்டின் சட்டசபை நாட்டில் இயங்கும் ஒரு மொழியினையோ, அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளையோ, அல்லது இந்திமொழியையோ, சட்டம் செய்து ஆட்சிமொழியாக அமைத்துக் கொள்ளலாம். இப்பிரிவு முக்கியமானதால் ஆங்கிலத்திலும் படிக்கிறேன்:

Subject to the provisions of Articles 346 and 347, the Legislature of a State may by law adopt any one or more of the languages in use in the State or Hindi, as the language or languages to be used for all or any of the official purposes of that State. ஆகையால் உடனடியாகத் தமிழ் மொழியை ஆட்சிமொழியாக

இச்சட்டப்பிரிவின்படி அமைக்க வேண்டும்.

மேலும் 345 பிரிவு கூறுவதாவது — ஒரு நாடு தன் மொழியை ஆட்சிமொழியாக அமைத்துக்கொள்ளாவிட்டால் முன் இருந்தவாறே ஆங்கில மொழி அரசியல் நடவடிக்கைகளுக்காக (for all official purposes)த் தொடர்ந்திருக்கும் —ஆகையால் நம் நாட்டில் அரசு மொழியாக இருப்பது ஆங்கில மொழி ஒன்றுதான். 346 பிரிவு விதிப்பதாவது—இந்தியப் பேராசுக்கும் ஒருநாட்டுக்கும்இடையேயும், ஒரு நாட்டிற்கும் மற்ெருரு நாட்டிற்கும் இடையேயும், எந்த மொழியைப் பேராசு அரசு மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறதோ, அந்த மொழி தான் அரசியல் நடவடிக்கைகளுக்குப் பயன்படும். ஆகையால், இந்தச் சட்டப்படிக்கும் இந்தியா முழுதும் ஆங்கில மொழிதான் அரசு மொழியாக இருக்கிறது.

345–வது பிரிவுப்படி தமிழ் மொழியை ஆட்சிமொழியாகச் செய்யாது, பின்னிட்டு இந்தி மொழியும் ஆட்சி மொழியாக அமர்ந்துவிட்டால் என்னவாகும்? —அப்போது தமிழுக்கு முதல் இடம் இல்லாமல் போய்விடும். இதைப்பற்றி 347 பிரிவுச்சட்டம் சொல்லுவது: "உங்கள் நாட்டிலே பெரும்பான்மையான மக்கள் பேசும் ஒரு மொழியினை, அந்நாட்டிலே ஏற்றுக்கொள்ள வேண்டும். (recognise) என்று ஒருமுகமாகக் (demand) கேட்டால், அப்போது இந்தியப் பேராசின் சனுதிபதி மனமிசைந்தால், அந்த மொழியும் நாட்டு வேலைக்காகக் குறிப்பிட்ட அளவுக்கு இருக்கட்டும் (shall also be officially recognised) என்று (direct) கட்டளையிடுவார். 345 பிரிவுப்படி ஆண்டவன் கொடுத்த கைகளாலேயே நாமே சட்டம் செய்ய வகையிருக்க அது செய்யாது சோம்பிக்கிடந்து, பின் 347 பிரிவைக்காட்டி மொழிக்கெனப் பல்லைக்காட்டிப், பிச்சை கேட்கக் கையேந்துவது என்ன பேதைமையாகும். ஆகையால், நாம் எச்சரிக்கையாயிருந்து, உடனடியாகத் தமிழ் மொழியை ஆட்சிமொழியாகச் செய்விக்க வேண்டும்—இல்லாவிடில் தமிழ் நாட்டின்கண் தமிழ்மொழி முதல் இடம் பெறுது குன்றிவிடும்.

முன்பாகத்தில் விளக்கியபடி இந்தி மொழி ஆட்சிமொழியாகிச் சட்டமன்றங்களிலும் வழக்குமன்றங்களிலும் புகும். "சட்டமன்றங்களில் தமிழ் தானே வழங்குகிறது" என்று சிலர் சொல்வார்கள். ஆனல், தமிழ் வழங்குவதினுலேயே அது ஆட்சிமொழி ஆகிவிடாது. ஏனெனில், 348 பிரிவு இதைப் பற்றிச் சட்டம் சொல்வதாவது.

(1) பார்லிமெண்ட் சட்டம் இயற்றும் வரைக்கும் (a) தீர்ப்புகள் (Judgements) டிக்ரிகள் (Decrees) (b) இதர உத்தரவுகள் (Orders) இவையெல்லாம் ஆங்கில மொழியிலேயே இருக்கும்.

(2) உயர் நீதி மன்றங்களில் (Supreme Court and every High Court) நடைபெறும் நடவடிக்கைகள் (proceedings), மற்றைய நூல்கள் (Texts), சட்டங்கள் (Bills), விதிகள் (Acts, Rules, Regulations) முதலியவை ஆங்கில மொழியில் நடைபெறும்.

(3) ஆனால் இந்தியப் பேரரசுத் தலைவரின் முன் அனுமதி பெற்று, அந்நாட்டரசுத் தலைவர் (Governor) அவர்கள் மேற்கண்ட நடவடிக்கைகள் — சட்டங்கள் இவைகளை இந்திமொழியிலாவது, அல்லது அந்நாட்டின் ஆட்சிமொழியிலாவது, நடைபெற உத்தரவு செய்யலாம். ஆகையால் உயர்நீதி மன்றங்களில் நாம், நம்மொழியிலே மன்றாடவேண்டு மென்றால், முதலடியாக நம் தமிழ்மொழியை ஆட்சிமொழியாக, 345 பிரிவுச்சட்டப்படி செய்யவேண்டும். அப்படிச் செய்யாதவரைக்கும் ஆங்கிலமே உயர்நீதி மன்றங்களில் நடைபெறும்—ஆங்கிலத்தை விடுத்து இந்தி மொழியை, உயர் நீதிமன்றங்களில் வைக்க, 348 (2) உட்பிரிவு, சனாதிபதி அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கிறது — நாட்டின் சட்டசபைகளைக் கேட்டுத்தான் செய்யவேண்டும் என்றில்லை. ஆகையால், தமிழ்மொழி உயர்நீதி மன்றங்களில் வழங்க வேண்டுமானால் முன்னடியாகவே ஆட்சிமொழியாகச் செய்வித்தல் வேண்டும்.

உலகுக்கு ஒருவன்தான் முதல்வன் என்னும் மெய்யுணர்வை உணர்த்திய திருவள்ளுவர் சிறப்பாக மொழியைத் தான் உவமையாகக் கையாளுகிறார். எப்படி, எல்லா (தமிழ்) எழுத்துக்களின் ஒலிக்கும் வடிவத்திற்கும், முதலெழுத்தாகிய அகரம் காரணமாயிருக்கிறதோ, அதேபோல நாம் ஞானம் பெறவும், கல்வியைக் கசடறக் கற்கவும், கற்றவழி நிற்கவும், எல்லாத் துறைகளிலும் கல்வி கற்று ஊதியம் பெற்று நலமெல்லாம் அடைந்து நல்வாழ்வு வாழவும் உதவி அளிப்பது நமது தமிழ்மொழியே ஆகும்.

“அகர முதல எழுத்துஎல்லாம்ஆதி
பகவன் முதற்றே உலகு.”

தமிழ்மொழியை ஆட்சிமொழி ஆக்குவோம்.

தமிழ் வாழ்க !

புதிய திட்டம் தோற்றுவிட்டது!
புள்ளி விவரங்கள் பேசுகின்றன!

"புதிய கல்வித் திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட பிறகு இராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த ஆரம்பப்பள்ளிகளில் 5008 மாணவர்கள் அதிகமாகச் சேர்ந்திருக்கிறார்கள். மதுரை ஜில்லாவில் அதிகமானவர் தொகை 9100. தஞ்சை ஜில்லாவிலும் இப்படித்தான் மாணவர்களின் தொகை அதிகமாகி இருக்கிறது."

—கல்வி அமைச்சர்
சுப்பிரமணியம்

"ஏனைய ஜில்லாக்களில் மாணவர்களின் தொகை புதிய திட்டம் வருவதற்குமுன் இருந்ததைவிட இப்போது குறைந்து விட்டது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்."

—முதலமைச்சர் ஆச்சாரியார்

புதிய கல்வித் திட்டத்தைப் பற்றி சென்னை சட்ட சபையில் முதலமைச்சர் ஆச்சாரியாரும் கல்வி அமைச்சர் சுப்ரமண்யரும் 24–12–53 அன்று தெரிவித்திருக்கிற கருத்துரைகள் இவை.

அதே தேதியில் வெளியான "சுதேசமித்திரன்" இதழின் இரண்டாம் பக்கத்தில் 5–6–வது பத்திகளில் இந்தச் சொற்பொழிவுகள் இரண்டும் வெளியிடப்பட்டிருக்கின்றன.

இந்தக் கருத்துரைகள் இரண்டையும் கவனித்துப் பார்க்கும் யாரும் புதிய திட்டம் தோற்றுவிட்டது என்பதை நிச்சயமாக ஒப்புக் கொள்வார்கள்.

இப்போது இருக்கிற இதே அளவு ஆசிரியர்களையும் பள்ளிக்கூடங்களையும் வைத்துக் கொண்டே, மாணவர்களின் தொகையை, இப்போது இருப்பதைவிட **இரண்டு மடங்காக** அதிகமாக்க முடியும் என்பது தான், புதிய திட்டத்திற்கு ஆதாரவாக, அமைச்சர் ஆச்சாரியாரால் கூறப்பட்ட ஒரே ஒரு வாதம் ஆகும்.

ஆகவே புதிய திட்டம் வெற்றி பெற்றுவிட்டது என்கிற நிலைமை ஏற்பட வேண்டுமானால், மாணவர்களின் தொகை, முன்பு இருந்ததைவிட இப்போது **இரண்டு மடங்காக** ஆகியிருக்க வேண்டும்.

ஆனால் அப்படி ஆகியிருக்கிறதா இப்போது? நிச்சயமாக இல்லை.

மைனர் பஞ்சாயத்து, மேஜர் பஞ்சாயத்து ஆகிய இருவகை வட்டாரங்களில் மட்டும்தான் புதிய திட்டம் திணிக்கப்பட்டிருக்கிறது.

இந்த இருவகை வட்டாரங்களில் ஏற்கெனவே பயின்று

கொண்டிருந்த ஆரம்பப்பள்ளி மாணவர்களின் தொகை ஏறத்தாழ இருபது லட்சம் இருக்கும்.

ஆச்சாரியாரின் திட்டம் வெற்றிபெற வேண்டுமானால், இந்தத் தொகை, **இரண்டு மடங்காக** ஆகவேண்டும். அதாவது ஏற்கெனவே படித்துக் கொண்டிருந்த இருபது இலட்சம் பேர் அல்லாமல் மேலும் ஓர் இருபது இலட்சம் பேர் பள்ளிகளில் சேர்ந்தாக வேண்டும்.

ஆனால் சேர்ந்திருக்கிறார்களா இன்றைய தினம்?

இல்லை இல்லை என்பதைத் தெள்ளத் தெளியத் தெரிவிக்கின்றன அமைச்சர்கள் இருவரின் சட்டசபைச் சொற்பொழிவுகள்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 5008 பேரும், மதுரை மாவட்டத்தில் 9100 பேரும், தஞ்சை மாவட்டத்தில் கிட்டத்தட்ட இதே போலவும் மாணவர்களின் தொகை உயர்ந்திருக்கிறது என்று கல்வி அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

தஞ்சை மாவட்டத்தில் எவ்வளவு மாணவர்கள் உயர்ந்திருக்கிறார்கள் என்பதற்குரிய புள்ளி விவரத்தைத் தரவில்லை தோழர் சுப்பிரமணியனார்.

இராமநாதபுரம் — மதுரை மாவட்டங்களைப் போலவே தான் அங்கும் மாணவர்களின் உயர்வு இருக்கிறது என்று மட்டும் தான் அவர் கூறியிருக்கிறார்.

ஆகவே அங்கு உயர்ந்திருக்கிற மாணவர்களின் தொகை ஒரு 6000 இருக்கும் என்று வைத்துக் கொண்டாலும், மூன்று மாவட்டங்களிலுமாகச் சேர்த்து, உயர்ந்திருக்கிற மாணவர்களின் தொகை, 20,000 க்கு மேல் இருக்க முடியாது.

இந்த மூன்று மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய பதினொரு மாவட்டங்களிலும் மாணவர்களின் தொகை அதிகமாகவில்லை. அதிகம் ஆகாதது மட்டுமல்ல, குறைந்தும் போயிருக்கிறது என்று முதலமைச்சர் ஆச்சாரியாரே கூறுகிறார்.

திட்டம் வெற்றிபெறவேண்டுமானால், சென்னை மாகாணம் முழுவதற்குமாகச் சேர்த்து இருபது லட்சம் பிள்ளைகள் புதிதாகச் சேர்ந்தாக வேண்டும்.

ஆனால் இப்போதோ, மூன்று மாவட்டங்களில் மட்டும் இருபதாயிரம் பிள்ளைகள் புதிதாகச் சேர்ந்திருக்கிறார்கள்.

ஏனைய பதினொரு மாவட்டங்களிலும் மாணவர் தொகை முன்பிருந்ததைவிடக் குறைந்து போயிருக்கிறது.

அப்படிக் குறைந்திருக்கும் மாணவர்களின் தொகை எவ்வளவு என்பதற்குரிய புள்ளி விவரங்களைத் தெரிவிக்கவில்லை ஆச்சாரியார்.

குறைந்திருப்பவர்களின் தொகை ஒரு இருபதாயிரமாவது இருக்கும் என்று வைத்துக் கொண்டால், புதிய திட்டத்தால் மதுரை—தஞ்சை—இராமனாதபுரம் ஜில்லாக்களில் அதிகமாயிருக்கும் மாணவர்கள் தொகை இருபதாயிரத்துக்கும், ஏனைய பதினொரு ஜில்லாக்களில் குறைந்து போயிருக்கும் தொகை இருபதாயிரத்துக்கும் சரிக்குச் சரியாகி விடுகிறது.

ஆகவே மாகாணம் முழுவதற்குமாகப் பார்க்கிறபோது புதிய திட்டத்தால், ஒரே ஒரு பையன்கூட அதிகமாகவில்லை என்று ஏற்பட்டு விடுகிறது.

அப்படியெல்லாம் பேசக் கூடாது — பதினொரு ஜில்லாக்களில் குறைந்திருக்கும் மாணவர்களின் தொகை எவ்வளவு என்பது தெரியாத காரணத்தால் அதனைக் கணக்கிலேயே சேர்க்கக் கூடாது என்று ராஜாஜி பக்தர்கள் யாராவது கூறுவதாக இருந்தால், அந்த வாதத்தையும் நாம் ஒப்புக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

பதினொரு மாவட்டங்களில் மாணவர் தொகை குறைந்திருக்கிறது என்று ஆச்சாரியாரே கூறுகிறார். ஆனால் வாதத்திற்காக அங்கெல்லாம் மாணவர் தொகை குறையவில்லை என்று வைத்துக் கொண்டால் கூட மாகாணம் முழுவதற்குமாகச் சேர்த்து, 20,000 பிள்ளைகள் தான், அதுவும் மூன்று மாவட்டங்களில் மட்டும் தான், எண்ணிக்கையில் அதிகமாகி இருக்கிறார்கள் என்று ஆகிறது.

திட்டம் வெற்றி பெற்றிருக்க வேண்டுமானால் இருபது லட்சம் பிள்ளைகள் புதிதாகச் சேர்ந்திருக்க வேண்டும். ஆனால் இப்போது சேர்ந்திருப்பதோ கேவலம் இருபதாயிரம் என்றுதான் ஆகிறது.

இதன் பெயர் ஒரு வெற்றி என்று ஆச்சாரியார் கூடக் கூற முடியாது.

திட்டம் தோற்று விட்டது என்பதற்கு அமைச்சர்கள் தந்திருக்கிற இந்தப் புள்ளி விவரங்களைவிட வேறென்ன ஆதாரம் தேவை?

அறிஞர் வாயுரை

எனக்கு ஒரு சாம்ராஜ்யத்தையே கொடுப்பதாக நீங்கள் ஆசை காட்டினாலும், அதற்காக நான் என்னுடைய கருத்துக்களை ஒரு போதும் மாற்றிக்கொள்ளமாட்டேன். எனக்கு என்னுடைய சுதந்தரந்தான் பெரியது. சாம்ராஜ்யமல்ல.

—பைரன்

வாழ்க்கையை வதைக்கும் விற்பனை வரி

"என்ன மச்சான் வெளியே போறயா?"

"ஆமாம் அஞ்சலை! ஏன்? என்ன விஷயம்?"

"அரிசி வாங்கணுமே மச்சான்! பணம் கொடுக்காமெ போறியே!"

"ஓ! அதுவா! மறந்தேபோயிட்டேனே! இந்தா இரண்டு ரூபா! எடுத்துக்கிட்டுபோயி அரிசி வாங்கிக்கோ!

"இரண்டு ரூபா மட்டுங்கொடுத்தா மிச்சம் அரையணா யார் கொடுப்பா?"

"அரையணாவா? அது எதுக்கு அஞ்சலை?"

"எதுக்கா? இரண்டு ரூபா காசு, இரண்டு படி அரிசியின் விலைக்கு ஆச்சி! அப்புறம், விற்பனை வரி அரையணா தனியாய் இல்லே!"

"ஓ! அது ஒரு சனியன் இருக்கா! சரி சரி இந்தா அரையணா! ஏழையின் காசு எப்படி எப்படியோ தொலையுது!"

வண்டியிழுத்துப் பிழைக்கும் ஏழை வரதப்பனுக்கும் அவனுடைய அன்பு மனைவி—ஆனால் வறுமையின் உருவம் அஞ்சலைக்குமிடையே அடிக்கடி நடைபெறும் உரையாடல் இது.

* * *

"அப்பா! அப்பா!"

"ஏண்டா, என்னடா வேணும்?"

"புத்தகம் வாங்கவேண்டுமே! மூன்று வாரமா சொல்லிக்கிட்டு இருக்கேனே!"

"புத்தகமா? என்னடா விலை அதுக்கு?"

"எல்லாப் புத்தகமும் சேர்த்து நான்கு ரூபாய் ஆகுது. நான்கு ரூபாயும் ஓரணாவுங்கொடுப்பா"

"அது என்னடா கூட ஒரு ஓரணா கொசுரு"

"கொசுரு இல்லெப்பா—விற்பனை வரி!"

"அது ஒரு தண்டமா! எங்கேயிருக்கு பணம் இதுக்கெல்லாம்! சரி! சரி! சாயங்காலமா கேளு! எப்படியாவது தரேன் பணம்!"

கழனியிலே வேலை செய்யும் கந்தசாமி என்னும் உழவனுக்கும், அவனுடைய பத்து வயது சிறுவன் பாலுசாமிக்குமிடையே நடைபெறும் உரையாடலின் தன்மை இது.

* * *

"ஏண்டி நீலா! பாவாடைத் துணி வாங்கி வந்தாச்சா?!'

"ஓ! வாங்கியாச்சே அக்கா! துணி விலை ஆறு ரூபா! விற்பனை வரி ஒரு ஒன்றரை அணா"!

"துணி விலை இல்லாமே, விற்பனை வரி வேறயா?"

"ஆமாம் அக்கா! எந்த சாமானை வாங்கினாலும் அதை ஒண்ணு கொடுத்துத் தொலைய வேண்டியிருக்கு!"

"நல்ல சர்க்காரு! யாராச்சும் பணக்காரன் கிட்ட வரியை வாங்காம, எல்லாம், நம்மைப்போலிருக்கிற ஏழைங்ககிட்டதானா இப்படி வரி வரியா வாங்கணும்!"

"அதுதானே அக்கா நானும் சொல்றேன்! வயிற்று சோற்றுக்கே போதுமான பணம் இல்லாத நம்பகிட்டதானா சர்க்காரும் பணம் தண்டற வேலையை ஆரம்பிக்கணும்?"

மாதம் நாற்பது ரூபாய்தான் ஊதியம் என்கிற பரிதாப நிலையில் உள்ள குமாஸ்தா குட்டியப்பனின் மூத்த பெண் லீலா தன் தங்கை நீலாவுடன் பேசிக்கொண்டிருக்கும் ஒரு கட்டம் மேலே தரப்பட்டிருப்பது.

சென்னை மாநிலத்தில், ஒவ்வொரு வீட்டிலேயும் இத்தகு உரையாடல்கள் நடைபெறுவதை யாரும் சர்வசாதாரணமாகக் காணலாம்.

புத்தகம் வாங்கினாலும், பாவாடைத் துணி வாங்கினாலும், கோதுமை வாங்கினாலும், உப்பு, புளி, மிளகாய் வாங்கினாலும், மக்கள் விற்பனை வரி என்ற பெயரால் ஒரு தொகையைக் கொடுத்துத் தீரவேண்டியிருக்கிறது.

உளுத்தம் பருப்பு ஒரு படி வாங்கினால் அதற்கும் விற்பனை வரி இருக்கிறது. சீயக்காய் பொட்டலம் ஒரு எட்டணாவுக்கு வேண்டுமானால் அதற்கும் விற்பனை வரி இருக்கிறது.

நல்லெண்ணெய் ஒரு வீசை வாங்கினால் அங்கேயும் விற்பனை வரி தோன்றுகிறது. வெந்தயம், கடுகு, சீரகம் வாங்கினால் அங்கேயும் விற்பனை வரி காட்சியளிக்கிறது.

பேனா ஒன்று வாங்கினால், நானும் இருக்கிறேன் மறந்து விடாதே என்று உரத்த குரலில் மிரட்டுகிறது விற்பனை வரி. பல கையோ பென்சிலோ நோட்புக்கோ வாங்கினால் அப்போதும் பின்னாலேயே வந்து நம் சட்டைப் பையைப் பிடித்து இழுக்கிறது விற்பனை வரி.

மேஜையோ, நாற்காலியோ, அலுமினியத் தட்டோ, பீங்கான் கிண்ணமோ, கண்ணாடிப் பாத்திரமோ குழந்தைகளுக்கான சாமானோ, எதுவாக இருந்தாலுஞ்சரி, விற்பனை வரி என்கிற விபரீதத்தின் தர்பார் இல்லாமல் ஒரு பண்டத்தை வாங்கமுடிவதில்லை,

அங்கு இங்கு எனாதபடி எங்கும் நிறைந்து இருப்பவர் ஆண்டவன் என்று கூறுவார்கள். அது உண்மையோ இல்லையோ நமக்குத் தெரியாது. ஆனால்

சென்னை மாநிலத்தைப் பொறுத்தவரையில் இந்த வர்ணனையும் விளக்கவுரையும் விற்பனை வரிக்குத்தான் மிகவும் பொருத்தமானதாகும். உண்மையிலேயே அது, அங்கு இங்கு, எனுதபடி எங்கும் நிறைந்துதான் இருக்கிறது.

எழில்மிகு மாளிகை, ஏழடுக்கு பங்களா, சீமான் வீட்டு சிங்காரத் தோட்டம், ஜமீன்தாருக்கு உரிய ஜகஜ்ஜோதி பவனம் இப்படிப்பட்ட இடங்களில் மட்டுமல்ல, வீதி கூட்டும் வேலாயியின் குடிசை, கட்டைவெட்டும் கந்தப்பசாமியின் இல்லம், மூட்டை சுமக்கும் முனியாண்டியின் சாக்கடை ஓரத்து ஒன்றரையடி "வீடு", ரிக்ஷா இழுக்கும் ரங்கசாமியின் தங்குமிடம்—இந்த இடங்களையும் விட்டு வைக்க மறுக்கிறது விற்பனை வரி.

சீமான்கள், கவர்னர்கள், ஐ. ஸி. எஸ். ஐ. ஏ. எஸ். அதிகார வர்க்கங்கள், ஜமீன் ஜாம்பவான்கள், மிட்டா மிராசுகள், மந்திரிகள் அவர் அனைவர்கள் இப்படிப்பட்டவர்களிடம் சென்றால் மட்டும் போதும் என்கிற திருப்தி விற்பனை வரிக்குக் கிடையாது.

எலும்புந் தோலுமாகக் காட்சியளிக்கும் ஏழை, வாடிய வயிறுடன் வதங்குந் தொழிலாளி, ஒட்டி உலர்ந்த கன்னத்துடன் காணப்படுங் குமாஸ்தா, நாளை வாழ்வுக்கு என்னசெய்வோம் என்று ஏங்கித் தவிக்கும் ஆரம்ப ஆசிரியன்—இப்படிப்பட்டவர்களை இழுத்துப் பிடித்து, அவர்கள் மடியிலிருந்து கொஞ்சம் பணத்தைத் தேடி எடுத்துப் பறித்துக்கொண்ட பிறகுதான் விற்பனை வரிக்குத் திருப்தி என்பது ஏற்படுகிறது.

இந்த மாநிலத்தில் உள்ள ஏனைய எல்லா வரிகளையும் விட ஏழை மக்களைக் கசக்கிப் பிழியும் கொடுமையில் மிக அதிகமான பங்கு கொண்டிருப்பது விற்பனை வரி என்கிற பெயர் படைத்த அந்த விபரீதம் நிறைந்த விசித்திர வரிதான் ஆகும்.

மாதம் முப்பதோ நாற்பதோ அல்லது ஐம்பதோ, அறுபதோதான் ஏழை மக்கள் பெறுகிற ஊதியமாகும். இந்தப் பரிதாபகரமான ஊதியத்தைக் கொண்டு அவர்களால் உயிர் வாழ்வதற்குத் தேவைப்படுகிற மிகக்குறைந்த அளவு வசதிகளைக்கூட முழு அளவில் பெறுவது இயலாது. உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், படிக்கக் கல்வி, நோய் வந்தால் அது தீர்க்க மருந்து—இந்த ஐந்தும் மனித வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைத் தேவைகள். வேறு எந்தத் தேவைகளை ஒரு மனிதன் நிறைவேற்றினாலும் நிறைவேற்றாவிட்டாலும் இந்த ஐந்தையும் நிறைவேற்றியே தீரவேண்டும். இந்த ஐந்து தேவைகளைக் கூட நிறைவு செய்ய இயலாத நிலையில் ஒரு மனிதன் வாழ்வானாயின், அவனுடைய வாழ்வு வாழ்வாக இருக்காது. அது வேதனையின்

வடிவமாகத்தான் இருக்கும். அத்தகு வாழ்க்கையிலே துயரந்தான் அரசோச்சும். கண்ணீர்தான் தன் முழு வல்லமையைக் காட்டி நிற்கும். இன்பம், நலம், எழில், மகிழ்ச்சி—இத்தகு சொற்களெல்லாம் அத்தகு வாழ்க்கையில் காணப்படமாட்டா. வறுமை, வாட்டம், துயரம், துக்கம் இத்தகு சொற்கள்தான் அங்கே ஏராளமாகக் காட்சி தரும்.

சென்னை மாநிலத்தில் உள்ள பொதுமக்களில் ஏழைகள், நடுத்தர வர்க்கத்தினர், பாட்டாளிகள், உழவர்கள் ஆகியவர்களின் வாழ்க்கை இப்படிப்பட்ட சோக சித்திரமாகத்தான் இருக்கிறது. உண்பதற்குத் தேவையான முழு அளவு உணவைக்கூடப் பெறமுடியாத பரிதாப ஓவியமாகத்தான் உள்ளது. என்றாலும் இப்படிப்பட்ட மக்களிடமிருந்துதான் விற்பனை வரி என்கிற பெயரால் ஒரு குறிப்பிடத்தக்க தொகையைத் தட்டிப் பறித்துவிடுகிறது காருண்யம் மிக்க காங்கிரஸ் அரசாங்கம்.

தங்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்குக்கூடத் தேவையான பணமின்றித் தவிக்கும் ஏழை மக்களிடமிருந்து விற்பனை வரி வாங்கப்படுகிறது என்றால் அதற்கு என்ன பொருள்? அந்த ஏழை மக்களின் உணவிலேயிருந்து ஒரு பகுதி பறிக்கப்படுகிறது என்று பொருள். அவர்கள் உடுத்துக்கொண்டிருக்கிற கந்தைத் துணியிலிருந்து இரண்டு முழம் கத்தரித்துக்கொள்ளப்படுகிறது என்று பொருள். ஏற்கெனவே சுமக்க முடியாமல் சுமக்கப்படுகிற அவர்களுடைய வாழ்க்கைப் பளு மேலும் கொஞ்சம் அதிக சுமை உடையதாக ஆக்கப்படுகிறது என்று பொருள். அவர்களுடைய வேதனையின் எல்லையும் அளவும் விரிவாக்கப்படுகின்றன என்று பொருள்.

பணக்காரர்கள் வாங்குகிற சாமான்களுக்கும் விற்பனை வரி உண்டு என்றாலும் இந்த வரி அவர்களை அதிகமாகப் பாதிக்காது. ஏனெனில் அவர்கள் இந்த வரியைச் செலுத்துவதன் மூலமாக உணவு—உடை—இல்லம்—மருத்துவ வசதி முதலிய அவர்களுடைய அடிப்படைத் தேவைகள் பாதிக்கப்படப்போவதில்லை. அவர்களிடம் குவிந்து கிடக்கிற பணத்திலிருந்து அவர்கள் மட்டுமல்ல, அவர்களுக்குப் பின் வரக்கூடிய பத்துத் தலைமுறையினர் சுகபோக வாழ்க்கையில் புரளமுடியும். எனவே அவர்கள் இந்த வரியைச் செலுத்துவது அவர்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு என்று இருக்கிற பணத்தில் இருந்தல்ல! என்ன செய்வது இந்தப் பணத்தை, எப்படிச் செலவழிப்பது இத்துணைப் பெருந் தொகையை என்று அவர்களால் ஆலோசிக்கப்பட வேண்டிய அளவு இரும்புப் பெட்டிகளை அடைத்துக்கொண்டு துருப்பிடித்துக் கிடக்கிற பணத்

திலிருந்துதான் அவர்கள் வரி செலுத்தப்போகிருர்கள்.

ஆனுல் ஏழைகளின் நிலேயோ அது அல்ல. அரிசியும் பருப்பும்எண்ணெயும் விறகும் வாங்குவதற்காகவென்று அவர்கள் வைத்திருக்கிற சிறு தொகையிலிருந்துதான் அவர்கள் இந்த வரியைச் செலுத்தியாக வேண்டும்.

விற்பனே வரியைச் செலுத்துவதன் மூலம் பணக்காரர்கள் உண்ணும் உணவு குறைந்துவிடாது. இருக்கும் இல்லம் அழிந்து விடாது.

ஆனுல் ஏழைகள் இந்த வரியைச் செலுத்தும்போது அப்படிச் செலுத்துவதன் விளேவாக அவர்கள் உண்ணும் உணவின் அளவு குறைந்துவிடும். உடுக்கும் உடையின் நிலே சுருங்கிவிடும். இருக்கும் இல்லத்தின் வசதி சுருண்டுவிடும்.

பணக்காரர்களேப் பொறுத்தவரையில் விற்பனே வரியைச் செலுத்துவது, தொலே தூரத்தில் கேட்கிற ரயில்வண்டிச் சத்தத்தால் அவர்கள் மூளேயில் ஏற்படுகிற சிறு சலனத்தைப் போன்றது.

ஆனுல் ஏழைகளுக்கோ என்ருல் இந்த வரியைச் செலுத்துவது, தலேயின்மீது ஓங்கி அடிக்கப்படுகிற சம்மட்டி அடியின் அதிர்ச்சியைப் போன்றது.

ஆகவே பணக்காரர்களால் இந்த வரியை சர்வ சாதாரணமான முறையில் ஏற்றுக்கொள்ள முடியும்.

ஆனுல ஏழைகளாடலா இந்த வரியைத் தாங்கவே முடியாது. சுமை அவ்வளவு அதிகம்.

கூர்ந்து கவனித்து பிரச்சினையை அலசி ஆராய்ந்து பார்க்காதவர்களுக்கு விற்பனே வரியின் கொடுமை, அதன் முழு அளவிலும் தெரியாது. இது என்ன பிரமாதம்? ரூபாய்க்குக் காலணுதானே விற்பனே வரி? என்று அத்தகையவர்கள் எளிதில் கூறிவிடுவர். ஆனுல் கூர்ந்து கவனித்தால் நாம் செலுத்தும் விற்பனே வரி, ரூபாய்க்குக் காலணு அல்ல, ஏறத்தாழ இரண்டணு அளவு இருக்கும் என்பது நன்ருகத் தெரிந்துவிடும். அப்படித் தெரிந்தால், அதன் பிறகு, விற்பனே வரியின் கொடுமை எவ்வளவு அதிகம் என்பதும் எளிதில் விளங்கி விடும்.

கோயமுத்தூரில் உள்ள ஒரு மில்லில் உற்பத்தியாகிற துணியைக் காஞ்சீபுரத்தில் இருக்கும் குமாஸ்தா குப்புசாமி பணம் கொடுத்து வாங்குகிருன் என்ருல், அந்தத் துணி, கோயமுத்தூர் மில்லிலிருந்து காஞ்சீபுரத்துக் குமாஸ்தாவிடம் வந்து சேருவதற்குள் ஏழெட்டு கை மாறிவிடுகிறது.

கோயமுத்தூர் மில்லின் உரிமையாளரிடமிருந்து துணியை மாநில மொத்த வியாபாரி விலேக்கு வாங்குகிருர். மாநில மொத்த வியாபாரியிடமிருந்து துணியை சென்னே மொத்த வியாபாரி வாங்குகிருர். பிறகு

துணி இந்த இரண்டாவது மனிதரிடமிருந்து காஞ்சீபுரத்து மொத்த வியாபாரிக்குப் போகிறது. அதற்கு அப்புறம் அந்த மொத்த வியாபாரியிடமிருந்து அந்த ஊரிலேயே இருக்கிற சிறிய வியாபாரியின் கைக்குத் தாவுகிறது. இறுதியில் அந்தத் துணி சின்னஞ் சிறிய கடைக்காரரிடம் சென்று, அதற்குப் பிறகு அவரிடமிருந்து குமாஸ்தா குப்புசாமியை அடைகிறது. இந்த விதமாக அந்தத் துணி அதனுடைய நீண்ட பயணத்தில் எத்தனை முறை கை மாறுகிறதோ அத்தனை முறை அதன் மீது ரூபாய்க்குக் காலணு வீதம் விற்பனை வரி வசூல் செய்யப்பட்டு விடுகிறது. எட்டு முறை துணி கைமாறியிருக்கிறது என்று சொன்னால் எட்டு காலணுக்கள் விற்பனை வரியாகச் செலுத்தப்பட்டு, இறுதியில் குப்புசாமியின் கரத்தைத் துணி அடைகிறபோது அவனிடமிருந்து மேலும் ஒரு காலணு வரி என்ற பெயரிலும், ஏனைய எட்டு காலணுக்கள் விலையின் ஒரு பகுதி என்ற பெயரிலும் வாங்கப்பட்டு விடுகின்றன.

ஒரே ஒரு காலணுவைத் தான் விற்பனை வரி என்ற முறையில் செலுத்துவதாக குப்புசாமி நம்புகிறான். ஏனெனில் "விற்பனை வரி—ரூபாய்க்குக் காலணு" என்று தான் அவனுக்குத் தரப்படுகிற ரசீதில் பொறிக்கப்பட்டிருக்கிறது. ஆனல் உண்மை அது அல்ல. அவனிடமிருந்து விற்பனை வரி என்கிற முறையில் அரசாங்கப் பொக்கிஷத்திற்குப் போய்ச் சேர்வது ஒரு காலணு அல்ல, ஒன்பது காலணுக்கள்.

ஒரு காலணு மட்டும் வெளிப்படையாகத் தெரிகிறது.

ஏனைய எட்டு காலணுக்களும் துணியின் விலைக்குள்ளே புகுந்து கொண்டிருப்பதால் அவனுடைய கண்ணுக்குத் தெரிவதில்லை.

எட்டு வியாபாரிகளிடம் துணி மாறியிருக்கிறது என்றல் அந்த எட்டு வியாபாரிகளும் ஒவ்வொரு முறை விற்பனை வரி செலுத்தியிருக்கிறர்கள் என்று பொருள்.

அவர்கள் எட்டுப் பேரும் தங்களுடைய சொந்தப் பணத்திலிருந்தா வரியைச் செலுத்தியிருக்கிறர்கள்? நிச்சயமாக இல்லை.

அவர்கள் ஒவ்வொருவரும் வரியைச் செலுத்திய பிறகு, அந்த வரிக்கு ஈடான அளவு துணியின் விலையை உயர்த்தி விடுகிறர்கள்.

இந்த விதமாக, கால் காலணுவாக எட்டு முறை துணியின் விலை உயர்த்தப்பட்டு அந்த எட்டு காலணுக்களும், இறுதியில் துணியின் விலையுடன் விலையாகச் சேர்த்து, குப்புசாமியிடமிருந்து தான் பறிக்கப்படுகின்றன.

ஒரு பண்டம் எத்தனை முறை கை மாறுகிறதோ அத்தனை முறையும் வரி உண்டு என்று இல்லாமல், ஒவ்வொரு பண்டத்திற்கும் ஒரே ஒரு முறைதான் வரி உண்டு என்று நிலைமை மாற்

றப்பட்டு விட்டால் விற்பனை வரியின் கொடுமை இப்போது இருக்கிற அளவு இருக்காது.

பொருளை உற்பத்தி செய்பவரிடமிருந்து யார் முதல் முறையாகப் பண்டத்தை விலைக்குவாங்குகிறார்களோ அவர்கள் மட்டுந்தான் விற்பனை வரி செலுத்த வேண்டும் என்று நிலைமையை மாற்றி அமைக்கலாம்.

அல்லது, பண்டம் கடைசி முறையாக யாரிடம் போய்ச்சேர்கிறதோ அவர்கள் மட்டுந்தான் வரி செலுத்தவேண்டும் என்றும் நிலைமையைத் திருத்தி அமைக்கலாம்.

உற்பத்தி முனை—அல்லது—கடைசி விற்பனை முனை—இந்த இரு முனைகளிலே ஏதாவது ஒரு முனையிலே மட்டுந்தான் வரி, என்று, நிலைமை திருத்தி அமைக்கப்பட்டுவிட்டால், காஞ்சீபுரத்துக் குமஸ்தா குப்புசாமி, ஒரே ஒரு காலணாதான் வரி செலுத்த வேண்டியிருக்கும். இப்போது இருப்பதுபோல ஒன்பது காலணாக்கள் செலுத்தவேண்டியிருக்காது.

இப்போது சென்னை மாநிலத்தில் அமுலில் இருப்பது பல முனை விற்பனை வரி.

எத்தனை முறை பண்டம் கை மாறுகிறதோ அத்தனை முறை வரி வசூலிக்கப்படுகிறது.

ஆகவேதான், கொடுமை, ஏழை மக்களால் தாங்கமுடியாத அளவு வளர்ந்துபோய் இருக்கிறது.

இந்தக் கொடுமை குறைந்து வரியின் பளு சுருங்கவேண்டுமானால், வரி, பல முனைகளிலும் வசூலிக்கப்படுவது என்கிற நிலைமை மறைந்து ஒரு முனையில் மட்டுந்தான் என்கிற நிலை உருவாக வேண்டும்.

அப்படி உருவானால்தான் ஏழையின் முதுகு சற்று நிமிர முடியும். —"போர்வாள்".

அறிஞர் வாயுரை

சமூகம் ஒரு விசித்திரமான வேதனைக் கூண்டு. அதில் ஏழைகள் கைதிகளாகிறார்கள், அவர்களைத் தண்டிக்கவும் கண்டிக்கவும் பணம் நீதிபதியாகிறது.

—காண்டேகர்

அறியாமையைத் தவிர வேறு இருளில்லை. அறிவைத் தவிர வேறு ஒளி இல்லை.

—சாக்ரடீஸ்

துறைமுகப் பணிகள்

[எம். பார்த்தசாரதி எம். ஏ.]

(துறைமுகப் பணிகள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதைக் குறித்து, சென்னைத் துறைமுகப் பாதுகாப்புக் குழுவின் போக்குவரத்துத் துறையின் துணை அலுவலாளர் (Assistant Traffic Manager) உயர் திருவாளர் **எம். பார்த்தசாரதி எம். ஏ.** *அவர்கள், 19–11–53 அன்று சென்னை வானொலியின் மூலம் ஆற்றிய விளக்கவுரை இது. ஆசிரியர்கட்கும் மாணவர்கட்கும் பெரிதும் பயன்படும் இச்சொற்பொழிவு, வானொலி நிலையத்தாரின் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது. சென்னைத் துறைமுகத்தின் சிக்கலான பணிகள் யாவும் எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றன என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டாமா? இதோ, துறைமுக அலுவலாளர் திருவாளர்* **பார்த்தசாரதி** *பேசுகிறார். கேட்போம், வாருங்கள்.)*

*　　*　　*

மாலை நேரம். மனோகரமான வேளை. மனதுக்கினிய காற்று. கடற்கரையில் நம் நண்பர்களுடனோ அல்லது குடும்பத்தாருடனோ ஓய்வாக வீற்றிருந்து உல்லாசமாகப் பொழுது போக்குகிறோம். அந்த நேரத்தில், நெடுந்தொலைவிலிருந்து வரும் ஒரு கப்பல், கொஞ்சம் கொஞ்சமாக அருகே வந்து, விரைவில் துறைமுகத்திற்குள் நுழைந்து சிங்காரமாக அமர்கிற காட்சியைப் பார்க்கிறோம். கப்பல் வந்து அமரும் காட்சி பார்க்கப் பார்க்கப் பேரானந்தம் தருகிறது. நண்பர்களிடம் அந்தக் காட்சியின் மாட்சியைக் கூறிக் கூறி உள்ளம் பூரித்துப் போகிறோம். அந்தக் காட்சி நம் உள்ளத்தில் உவகை யூற்றை உருவாக்குகிறது, என்பது உண்மைதான். ஆனால் 8,000, 10,000, 15,000 டன்கள் எடையுள்ள அவ்வளவு பாரமான பெருங்கப்பல் எப்படி துறைமுகத்தை அடைகிறது? எவ்வாறு ஓரிடத்தில் நிலைத்து நிற்கிறது? எவ்வண்ணம் மீண்டும் புறப்பட்டுச் செல்கிறது? ஏற்றுமதி, இறக்குமதி வேலைகள் எப்படி நடத்தப்படுகின்றன? யார் இவ்வளவு பெரிய பொறுப்புக்களையும் நிறைவேற்றுகிறார்கள்? இத்தனைக் கேள்விகளும் கடலின் அலைகள் போல் அடுக்கடுக்காக நம் உள்ளத்தில் எழுகின்றன அல்லவா?

ஆம்! யார் இவ்வளவு பொறுப்புக்களையும் நிறைவேற்றுபவர்கள்? சுருக்கமாகச் சொல்வதானால், துறைமுகப் பாதுகாப்புக் குழு அதாவது போர்ட் டிரஸ்ட்டு என்று ஆங்கிலத்தில் குறிப்பிடப்படுகிறதே அந்த மன்றம், அது தான் இத்தனைப் பணிகளையும் சிறந்த முறையிலே நிறைவேற்றுகிறது.

துறைமுகங்களைப் போற்றிப் பாதுகாக்கவும், சீர்திருத்தி முன்னேற்றவும் மத்திய அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்டிருக்கிறது துறைமுகப் பாதுகாப்புச் சட்டம். அந்தச் சட்டத்தின்படி அமைக்கப்பட்டு நிலைபேருன வாழ்க்கையும், தனக்கென்று ஒரு தனி முத்திரையும் கொண்டதாக விளங்கி வருவது துறைமுகப் பாதுகாப்புக் குழு.

சென்னைத் துறைமுகத்தைப் பாதுகாத்து வருகிற, போர்ட்டு டிரஸ்ட்டு மன்றம், ஒரு தலைவரை உள்ளடங்கிய 20 உறுப்பினர்களைக் கொண்டது. தலைவர் மத்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டு துறைமுகத்தின் அலுவல்கள் அத்தனைக்கும் தலைமைப் பொறுப்பாளராகப் பணியாற்றுகிறார். ஏனைய பத்தொன்பது உறுப்பினர்களில் எட்டு பேர் மத்திய அரசாங்கத்தாலும், ஒருவர் சென்னை நகராட்சிக் கழகத்தாலும், மற்றையோர் வியாபார வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்ட வணிக மன்றங்களாலும் நியமிக்கப்படுகிறார்கள். தலைவர் மத்திய அரசாங்கம் விரும்பும் கால அளவும், ஏனையவர்கள் இரண்டாண்டு கால அளவும் பதவி வகிக்கிறார்கள். இரண்டு வாரங்களுக்கொருமுறை போர்ட் ட்ரஸ்ட்டு குழுவினர் கூடி துறைமுக ஆக்க வேலைகளைப்பற்றி யோசிப்பர். பெரும்பான்மை வாக்குகள் மூலம் தீர்மானங்களை நிறைவேற்றுவர். சரக்குகளின் ஏற்றுமதி இறக்குமதிக்கான பல்வேறு வசதிகளைச் செய்து தருவதும், அந்த வசதிகளுக்கு ஈடான கட்டணத் தொகைகளை வகுப்பதும், அந்த வசதிகளைப் பெற விழைவோர் நிறைவேற்ற வேண்டிய நியந்தனைகளைத் தொகுப்பதும், இந்தப் பாதுகாப்புக்குழுவினரின் கடமைகள் ஆகும்.

துறைமுகம்! அது ஒரு சிறு சொல்! ஆனல் மனித சமுதாயத்தின் மாபெரும் நடவடிக்கைகள் பலவற்றைப் பொறுப்புடன் நிறைவேற்றும் சிறப்புள்ள இடம் அது. கடலுக்கும், நிலத்துக்கும் இடையே அமைந்திருக்கிற ஒரு வகை நுழைவு வாயில், துறைமுகம். அதன் ஒரு புறத்தில் பெரிய கப்பல்களும், சிறிய படகுகளும், உல்லாசத் தோணிகளும், பலவகை மரக்கலங்களும் பணி புரியும். அதன் மறுபுறத்தில் ரயில் வண்டித் தொடர்களும், மோட்டார் லாரிகளும், சுறுசுறுப்புடன் பவனிவரும். இந்தப் பக்கத்திலிருந்து அந்தப் பக்கத்திற்கும், அந்தப் பக்கத்திலிருந்து இந்தப் பக்கத்திற்குமாக ஆயிரக்கணக்கான பிரயாணிகளும், குன்

றெனக் குவிந்திருக்கும் சரக்கு களும், மாறி மாறிச் சென்றபடி இருப்பது துறைமுக வட்டாரத் தின் தனிப்பெரும் நிகழ்ச்சியா கும். லண்டன், அன்ட்வர்ப், கல்கத்தா ஆகிய நகரங்களில் உள்ள துறைமுகங்கள் இப்படிப் பட்ட நுழைவுவாயில்களில் மிகப் பெரியனவாகும்

துறைமுகம் என்பது ஒரு நுழைவு வாயில். ஆம், ஆனல் அது ஒரு நுழைவு வாயில் மட்டு மல்ல. ஓர் அற்புதமான பாது காப்பு வட்டமும் ஆகும். பாது காப்பு வட்டம். அதாவது போது மான அளவு தண்ணீரில் வசதி யோடு தங்கவும், கடலின் கொந் தளிப்பு, காற்றின் கொடுமை, ஆகியவற்றல் தாக்கப்படாமல் இருக்கவும், கப்பல்களுக்கு வசதி தரும் சிறப்பிடம். இந்த வித மாக அமைந்திருப்பது ஒவ்வொரு துறைமுகத்திலும் இருக்கவேண் டிய மிக முக்கியமான பண்பு களில் ஒன்ருகும். இத்தகைய பாதுகாப்புப் பண்பாடு சில துறை முகங்களுக்கு இயற்கையாக அமைந்திருக்கும். வேறு சிலவற் றிற்குத் துறைமுக என்ஜினியர் களைக்கொண்டு செயற்கையாக அமைக்கப்பட வேண்டியிருக் கும். கப்பல்கள் கவலை துளியு மின்றிப் பாதுகாப்புடன் தங்க வேண்டுமானல் துறைமுகத்தில் அமைதியான நீர்ப்பகுதி இருக்க வேண்டும். அதனை உருவாக்க அலைகளைத் தடுக்கும்அணைகளும், கப்பல் வாராவதிகளும் இருக்க வேண்டும். கப்பல் நுழையும் பகுதிகள், கப்பலின் தங்குமிடங் கள் ஆகிய இடங்களில் போது மான அளவு நீர் ஆழமாயிருக்க வேண்டும். இவ்வளவுதான ? கலங்கரை விளக்குகள், மூடுபனி அறிவிப்புகள், கம்பியில்லாத் தந் திக்கருவிகள், கப்பலை வெளியே இழுத்துச் செல்வதற்கான வசதி கள், அபாயக்குறி மிதவைகள், அபாய ஒலி விளக்குகள், துறை முகத்திற்குள் கப்பலைச் செலுத் தும் தனித்திறமை மாலுமிகளின் பணி, சொல்லப்போனல் கப்ப லின் பாதுகாப்புக்கென்று துறை முகத்தில் அமைக்கப்படவேண் டிய கருவிகளும், வசதிகளும் மளமளவென்று நம் கண்முன் தோன்றும். கப்பல்கள் ஆபத் தின்றி நுழையவும், பாதுகாப் புடன் தங்கியிருக்கவும் வசதிகள் அமைத்துத்தருவது துறைமுகத் தின் தலையாய கடமையாகும். அந்தக் கடமை நிறைவேற்றப் படாவிட்டால் துறைமுகம்,துறை முகமாக எப்படியிருக்கமுடியும் ?

நுழைவு வாயிலாகப் பணியாற் றுவதும், பாதுகாப்பு வட்டமாக ஒளிவீசுவதும் மட்டுமல்ல. சில துறைமுகங்கள் கடற்படைத் தளமாகவும் பயன்படுகின்றன.

துறைமுகப்பணி இந்த அள வோடு முடிந்துவிட வில்லை. கப் பல்கள் துறைமுகங்களை விட்டு மிக விரைவில் வெளியேறும் வகையில் ஏற்றுமதி இறக்குமதிப் பணிகள் துரிதமாக நடைபெற வேண்டும். அப்படி நடைபெறு வதற்கு ஏற்றமுறையில் துறை

முகங்கள் அமைந்திருக்கவேண்டும். கடலில் ஓடாமல் கப்பல், துறைமுகத்தில் தங்கியிருக்கும் ஒவ்வொரு நாளிலும் கப்பலின் உரிமையாளர்களுக்கு ஏற்படும் நஷ்டம் ஏராளம், என்பதை நாம் நினைவில் வைத்துக்கொண்டால், கப்பல்களின் ஏற்றுமதி இறக்குமதிப் பணிகளை விரைவில் முடிக்க வேண்டியது மிக மிக அவசியம் என்பது எளிதில் விளங்கும். இந்தப் பணிகளை விரைவில் முடிக்கவேண்டுமானால் கப்பல்கள் தங்குவதற்கான துறைமுக மேடைகள் சிறப்பாக அமைந்திருக்கவேண்டும். போதிய விளக்குகள் பொருந்தியதாகவும், ரயில்வே பாதைகள் நிரம்பியதாகவும், கப்பல் கட்டும் கம்பங்கள், பாரம் தூக்கும் இயந்திரங்கள், மின்சாரத்தால் இயங்கும் பாரம் தூக்கிகள் முதலியன அமைந்ததாகவும் இருக்க வேண்டும். சாக்குகளைச் சேமித்து வைக்கும் அறைகள், போதுமான அளவிலும், தரத்திலும், அமைந்திருப்பது முக்கியம். ஏற்றுமதி இறக்குமதிக்கான தொழிலாளர்களும், நிறுவனங்களும், கருவிகள், வண்டிகள், சாதனங்களும் வகைவகையாக இருந்தாகவேண்டும்.

அபாயக்குறி மிதவைகளிலும், கப்பல் கட்டும் கம்பங்களிலும், கப்பல்களைக் கட்டவும் பிறகு அவிழ்க்கவும் திறமை பெற்ற படகோட்டிகளைத் தயாராக வைத்திருப்பது துறைமுகப் பாதுகாப்புக் குழுவினரின் மிக முக்கியமான கடமைகளில் ஒன்று.

துறைமுகத்திற்குள் நுழையும் கப்பல்களை, முட்டுக் கப்பல்களின் துணைக்கொண்டு, ஏற்றுமதி இறக்குமதிக் கரைகளில் கொண்டு சேர்ப்பது, துறைமுக மாலுமிகளின் பணியாகும். கரையருகே வந்ததும் நங்கூரக்கயிறுகளைக் கொண்டு, கப்பல், துறைமுக மேடையில் உள்ள கம்பங்களில் கட்டப்படுகிறது. பின்னர் மேடையிலிருந்து கப்பலுள் செல்ல ஏறும்படி ஒன்றுபோடப்படுகிறது.

கப்பலில் இருந்து இறக்குமதியாகும் சரக்குகள் உடனே உரியவர்களை அடைந்து விடுவதில்லை. மலைபோல் குவியும் இறக்குமதிகளை மொத்தமாகச் சேர்த்து வைப்பதும், சிறிது சிறிதாக அவற்றை ரகவாரியாகப்பிரிப்பதும், நாளடைவில் அவற்றை நூற்றுக்கணக்கான சிறு கட்டுகளாக உருவாக்குவதும், இறுதியில் உரிமையாளர்களுக்கு அவற்றை அனுப்பிவைப்பதும், துறைமுகங்களில் மாதக் கணக்கில் நடைபெறும் முக்கியமானதோர் வேலை.

இதுபோலவே ஏற்றுமதிக்காக வரும் ஏராளமான பொருள்களையும், வகுத்தும் தொகுத்தும், பிரித்தும், சேர்த்தும், ஒழுங்குபடுத்தி, தக்க நேரத்தில் கப்பல்களில் ஏற்றும் பொறுப்புள்ள பெரும் பணியும் துறைமுக அதிகாரிகளால் நடத்தப்படுகிறது.

கடல் வழிப் பொருள்கள், ஏற்றுமதி, இறக்குமதி வரிவிதிப் பிற்காக, சுங்க அதிகாரிகளால் எடைபோடப்படுவதும், சோதிக் கப்படுவதும், ரகவாரியாக வரி விதிக்கப்படுவதும் துறைமுகங் களில்தான் நடைபெறுகின்றன.

கடல்துறை பாதுகாப்புக் குழு வினர் பல சமயங்களில் ஒரு ரயில்வே கம்பெனியாகவும் பணி புரியவேண்டியதிருக்கிறது. கடல் துறை வட்டாரத்திற்குள் ரயில் பாதைகள் போடுவது, ரயில் வண்டிகளை இயக்குவது, வரும் வண்டிகள் போகும் வண்டிகளில் பொருள்களை ஏற்றி இறக்குவது முதலிய எல்லாப் பொறுப்புகளை யும் கடல்துறைப் பாதுகாப்புக் குழுவினர்தான் ஏற்றுக்கொள்ளு கின்றனர்.

கடற் பிரயாணிகளின் நன் மைக்காகச் சிற்றுண்டிச் சாலைகள், ஓய்வு விடுதிகள், நலத்துறை ஏற் பாடுகள், மூட்டை முடிச்சுகளை இடத்திற்கு இடம் மாற்றுவதற் குரிய வசதிகள், அவற்றை சுங்க அதிகாரிகள் பரிசோதிக்கும் வசதிகள் இன்னும் பிற வசதி களைச் செய்து தருவதும் கடல் துறைக் குழுவினரின் கடமையே ஆகும். துறைமுக வட்டாரத் தின் சுகாதார ஏற்பாடுகளை எழில் பெற நிறைவேற்றுவதும், அந்த வட்டாரத்தின் தூய்மையை நிலை நாட்டுவதும், அவர்களின் கடமை களே.

கப்பல்களைப் பழுதுபார்ப்பது; கப்பல்களுக்குத் தேவையான கரி, நீர், பிற கருவிகளின் குறைவை நிரப்புவது; கப்பல் களுக்கும், பிரயாணிகளுக்கும் தேவையான எண்ணற்ற வசதி களைத் தருவது; கப்பல்களுக்குத் தேவையான தண்ணீர்ப் படகு கள் வைத்திருப்பது; வசதியுள்ள இடமாகயிருந்தால் புதிய கப்பல் களைக் கட்டுவதற்குத் தேவை யான கப்பல் கட்டும் தளங்கள் அமைப்பது; துறைமுக வட்டா ரத்தில் உள்ள பூமியின் சில பகுதிகளைத் துறைமுக வாழ்வை வசதியுள்ளதாக்கும் பணிகள் புரிவதற்காகவும், அவர்களின் பொருள்களைச் சேமித்து வைப் பதற்காகவும், குத்தகைக்கு விடு வது; துறைமுக நிலத்தின் உரி மையாளராகயிருந்து அதற்குரிய தொண்டுகள் அத்தனையிலும் ஈடுபடுவது முதலியன துறை முகக் குழுவினரின் பணிகளா கும். ஏராளம், ஏராளம், துறை முகப் பாதுகாப்புக் குழுவின ருக்கு உள்ள பொறுப்புகள் மிக மிக ஏராளம்.

இந்தியாவில் மொத்தம் 136 துறைமுகங்கள் இருக்கின்றன. அவற்றில் கல்கத்தா, பம்பாய், சென்னை, கொச்சி, விசாகப்பட்டி னம் ஆகிய நகரங்களில் உள்ள துறைமுகங்கள் மிக மிக முக்கிய மானவை. இந்த ஐந்திலேயும் கூட விசாகப்பட்டினம் துறை முகம் ஒன்றிலேதான் கப்பல் கட்டும் தளம் அமைக்கப்பட்டி ருக்கிறது. இத்தளத்தில் ஆண் டொன்றுக்கு 15,000 டன்

எடையுள்ள கப்பல்களைக் கட்டக் கூடிய வசதியுண்டு.

1948-ம் ஆண்டு முதல் இது வரை தனித்தனி 8000 டன் எடையுள்ள பதினேரு கப்பல்கள், இங்குக் கட்டப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கப்பலும் சுமார் 65 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டிருக்கிறது. ஆனால் பம்பாய்த் துறைமுகம் ஒன்றுதான் இந்தியாவிலேயே கடற்கரைத் தளத்திற்கு ஏற்றதாக விளங்குகிறது.

சரி! இனி நம் சென்னைத் துறைமுகம் எப்படிப்பட்டது என்பதைக் கவனிப்போம். கப்பல் கட்டும் தளம் உண்டா இங்கு? இல்லை. சிறந்த பாதுகாப்புத் துறையா இது? கிடையாது. கடற்படைத் தளமாக விளங்குகிறதா சென்னைத் துறை? அதுவுமில்லை. ஆனால் ஏற்றுமதி, இறக்குமதிக்கான மிகச் சிறந்த துறைமுகம் சென்னைத் துறைமுகம். துறைமுக மேடையை ஒட்டி, கப்பல்களை நிறுத்தி வைப்பதற்கான மிக அரிய தங்குமிடங்கள் ஒன்பது அமைந்திருக்கின்றன. ஆண்டு தோறும் பத்து லட்சம் டன் எடையுள்ள சரக்குகளைக் கையாளுவதற்கு ஏற்றமுறையில் அமைந்திருக்கிறது இந்தத் துறைமுகம். என்றாலும் சென்ற பத்தாண்டுக் காலமாக இதன் பணி வளர்ந்து வளர்ந்து, இப்போது, இத்துறைமுகம் ஆண்டு தோறும் இருபத்தி ஒன்றரை லட்சம் டன் சரக்குகளைக் கையாள்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது.

முடிவாக சென்னைத் துறைமுகத்தில் ஏற்றுமதி, இறக்குமதியாகும் முக்கியமான பொருள்களைப்பற்றி சிறிது விரிவாகக்கூறி முடிக்கிறேன்.

இறக்குமதியாகும் பொருள்கள் :—நிலக்கரி, எண்ணெய்கள், உரங்கள், உலோகங்கள், உணவுப் பொருள்கள், மரங்கள், ஆடைக்குத் தேவையான துணிகள், சிமின்ட், ரசாயனப் பொருள்கள், தோல், இரும்பு, இயந்திர வகைகள், காகிதம், பதனிடுதலுக்கும், அச்சுக்கும் வேண்டிய தாதுப் பொருள்கள், கட்டிட வேலைக்குத் தேவையான மூலப்பொருள்களும் மற்றவையும் சேர்ந்து ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய 18 லட்சம் டன்கள் மதிப்புள்ள பொருள்கள் இறக்குமதியாகின்றன. அதைப் போலவே, சென்னையிலிருந்து அயல் நாடுகளுக்கு நிலக்கடலை, கடலை எண்ணெய், துணிகள், புகையிலை, காய்கறிகள், தோல், உபயோகமற்ற சிறு இரும்புத்துண்டுகள், இரும்பின் மூலப்பொருள்கள், மாங்னசைட்டு, முதலிய பொருள்கள் ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய மூன்றரை லட்சம் டன்கள் ஏற்றுமதியாகின்றன.

(அகில இந்திய ரேடியோ
சென்னை.)

இருட்டறையில் நடப்பவை

(கா. வே. அண்ணாப்பிள்ளை ஆசிரியர், மேலபுஞ்சை, செங்கம் வட்டம்)

[புதிய கல்வித்திட்டத்தால் பாடசாலைகளில் பிள்ளைகள் அதிகமாகச் சேர்ந்து வருகிறார்கள் குறையவில்லை என்று பறைசாற்றி வரும் ஆட்சியாளருக்கு, தோழர் கா. வே. அண்ணாமலைப் பிள்ளை அவர்கள் எழுதியுள்ள கடிதத்தை அர்ப்பணிக்கின்றோம். இம்மாதிரியே ஆயிரக் கணக்கான ஆரம்பப் படசாலைகளில் மூன்றில் ஒரு பங்கு பிள்ளைகள் இப்புதிய கல்வித் திட்டத்தினால் குறைந்து வருகிறார்கள் என்பது கண் கூடு.]

தற்போது சென்னை மாநிலமெங்கணும் உள்ள ஆரம்ப ஆதாரக் கல்விக் கூடங்கள் தவிர, மற்றெங்குமுள்ள எல்லா ஆரம்பப் பள்ளிகளிலும், ஆச்சாரியாரால் கொண்டுவரப்பட்டுப் பருலோக்கர் கமிட்டியால்வெற்றியாக்கப்பட்ட புதிய கல்வித் திட்டப்படிதான் பாடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன என்பது எல்லோருமறிந்ததே. ஆனால், அதன்படியே எல்லா இடங்களிலும் நடத்தப் படுகிறதா? ஏதாவது பலன் கிடைத்ததா? என்றால் அங்கங்கே எவ்வாறு நடத்தப்படுகிறது என்றஉண்மையை உணர்ந்தோரே தவிர மற்றெல்லோராலும் கூறமுடியாது. உதாரணமாக எங்கள் பள்ளியின் தற்போதைய நிலைமையையும், கிராம மக்களின் மனக்கருத்தையும் சற்றுக் கவனித்தால் போதும்.

எங்கள் ஊர் செங்கம் வட்டத்தைச்சேர்ந்த சுமார் எண்ணூறு ஜனத்தொகைகளையுடைய செழிப்பான கிராமம். சுமார் இருபத்தைந்து ஆண்டுகளாக இங்கு பஞ்சாயத்துமன்றப் பள்ளிதான் நடத்தப்பட்டு வருகிறது. ஊரின் ஒரு பகுதியில்தான் எங்கள் பள்ளி அமைந்துள்ளது. பக்கத்திலே ஆலயங்கள். மாபெரும் அரசமரமொன்று ஓங்கி வளந்து பள்ளியை அழகுபடுத்திக் கொண்டிருக்கிறது. பள்ளிக்கு சுமார் பதினைந்தே கெச தொலைவில் ஏரி உள்ளது. நீராடுவதற்கு வசதியாக இருக்கும். இப்படிப்பட்ட கிராமத்திலுள்ளவர்கள் எல்லாருமேநியாயமும், பெருந்தன்மையுமுடையவர்கள். பெரும்பாலும் யாவரும் விவசாயிகள் தாம் என்றாலும் ஒவ்வொருவரும் பள்ளிக் கூடத்தைத் தம் தம் உயிராக மதித்துப் பிள்ளைகளைத் தவறாமல் பள்ளிக் கூடத்திற்கு அனுப்ப வேண்டும் என்ற எண்ணமுடையவர்கள். பிள்ளைகள் படித்து உத்தியோகம் செய்து சம்பாதிக்கா விட்டாலும் நாலு எழுத்தைக்கற்றுக்கொண்டு புத்திசாலித்தனமாக வாழ

வேண்டுமென்று விரும்புபவர்கள். இப்படிப்பட்ட உத்தமர்களை அடியோடு மாற்றியது புது ஆரம்பக் கல்வித் திட்டம்தான் என்றால் சிலருக்கு வியப்பாகத் தோன்றும். சிலருக்குக் கட்டுக்கதையாகவும் தோன்றும். ஆனால் பதின்மூன்று ஆண்டுகளாக இருக்கும் எனக் கல்லவா உண்மை தெரியும்.

எங்கள் பள்ளி 6–7–53 முதல் புதிய கல்வித் திட்டப்படி நடத்தப்படுகிறது. சுமார் இரண்டு மூன்று தினங்கள் எல்லா மாணவர்களையுமே வரவழைத்து திட்டத்தின் கருத்துக்களையும், பாடசாலை வரவேண்டிய காலத்தையும் விளக்கிக்கூறி பிறகு, அன்றன்று ஆஜராக வேண்டிய பிள்ளைகளை நிறுத்திக் கொண்டு மற்றவர்களை அனுப்பி வந்தோம். இப்படி ஒரு வாரம் சென்றது. நாளடைவில் பிள்ளைகள் வரவரக் குறைந்து கொண்டே வந்தார்கள். இது எங்களுக்கு மிகவும் வேதனையைத் தந்தது. நல்ல முறையிலே ஒழுங்காக நடந்து வந்த பள்ளிக்கூடம். மாணவர்கள் தவறாமல் வந்து கொண்டிருந்தவர்கள் இப்படி வேலை நிறுத்தம் செய்வது போல் நின்று விட்டால் எங்கட்கு வேதனையாக இன்றிப் பின் எங்ஙனமிருக்கும்? ஆசிரியர்கள் வீடுதோறும் சென்று மாணவர்களை அழைத்து வரும் பழக்கமே கிடையாது. வீடுகளில் பெற்றோர்கள், குழந்தைகளை நன்கு கவனித்துத் தவறாமல் அனுப்பி வந்து கொண்டிருந்தார்கள். சுற்றுப்புறக் கிராமங்களிலே ஒழுங்காகவும், எப்போதும் அதிக பிள்ளைகளுடனே நடந்த பள்ளிக்கூடம் அடியோடு மாறி விட்டது புதிய கல்வித்திட்டத்தால். ஏன்? புதியகல்வித்திட்டமே மாற்றி விட்டதென்று சொல்வதில்தான் வியப்பென்ன?

நாட்களாக ஆக, பிள்ளைகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்தது. எங்கட்கு மட்டும் கவலை அதிகரித்துக் கொண்டே போயிற்று. பழக்கத்திற்கு மாறாக வீடுதோறும் சென்று மாணவர்களைக்கூப்பிடும் புதிய முறையையும் மேற்கொண்டோம். ஆனால், அப்படி நாங்கள் கைக்கொண்ட புதிய முறையால் எங்கட்குக் கிடைத்த பரிசு என்ன தெரியுமா? என்றால் அது ரகசியம், வெளியே சொல்ல வெட்கமாக யிருக்கிறது. அவ்வளவும் வசை மொழிகள். ஆசிரியர்க்கட்கு முக்கியமான, ஏன் மனிதர்கட்கே உரிய சொத்தான மானத்தைப் பழித்து விட்டது. அதுவும் ஒவ்வொருவரிடமும் கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. ஆசிரியர்கள் சரிவரப் போதிக்கா விட்டால்கூட அம்மாதிரி திட்டமாட்டார்கள்.

"என்னய்யா ஐம்பமா கூப்பிட வந்துட்டே? இது வரை நீங்கள் கூப்பிடாமல் வந்தவன்தானே? இப்போது நீங்கள்வந்து கூப்பிட வேண்டிய காரணமென்ன இண்ணைக்கிக் காலையிலே வந்தால் நாளைக்கு மத்தியானம் வாச் சொல்றீங்களாமே? அது

என்னய்யா ஒரு வேளைப் பள்ளிக் கூடம்? ரெண்டு வேளையும் படிச்சா பையன் முன்னுக்கு வந்து விடுவான் என்று இப்படிச் செய்துட்டீங்களா? ரெண்டு வேளை படிக்கிறவன் ஒருவேளை படிச்சா படிச்சு கிழிஞ்ச மாதிரி தான்போ" என்ற பல்லவியே எல்லாரும் பாடத்தலைப் பட்டார்கள். நாங்கள் எவ்வளவோ தூரம் எடுத்துச் சொன்னோம். அவர்கள் அதையெல்லாம் மறுத்தே பேச ஆரம்பித்தார்கள்" வாத்தியாரு என்னமோ பெரிய சட்டத்தைக் கண்டு விட்டாப் பலே இருக்கே. என்னமோ கவர்ன்மெண்டிலே போட்டுட்டானும், அதைத்திருப் பித்திருப்பிப் பேசராரே. எதைய்யா கவர்ன்மெண்டிலேநல்லபடியா செய்யறுங்க? சும்மாயிருக்கும் சங்கை ஊதிக் கெடுத்தானும் ஆண்டி" என்ற மாதிரி இப்போ நல்லா படிச்ச பசங்களைக்கெடுக்க ஆரம்பிச்சுட்டாங்க. எல்லாம் தெரியுதைய்யா! இடையன் வண்ணுன், அம்பட்டன் எல்லாம் படிச்சி உத்தியோகத்துக்கு வந்துடு வாங்கன்னு தான் இந்த வேலை? ஏன் அதைவிட பள்ளிக் கூடத்தைத்தான் மூடி விடறது தானே. என் பையன் படிக்காத இங்கே ஒண்ணும் நின்றுவிடலே போய்யா. சர்க்காரிலே போடற மாதிரி எல்லாம் நடக்குதா? சர்க்காரில் போடறபடியே நடக்குருனு? எதையோ சொல்ருன் என்னமோ செய்பருன், சரி இதோ பாரு வாத்தியாரே சும்மா ஏன் திருப்பித் திருப்பிப் பேசணும்? இரண்டு வேளையும் சொல்லி ஒழுங்காக நடத்துவதாயிருந்தால் அனுப்புவோம். இல்லேண்ணு விட்டுடுங்க. அவன் வேறு ஏதாவது தொழிலைச் செய்யட்டும். ரெண்டுங் கெட்டானு இதிலும் கெட்டு அதிலும்கெட்டு பிரயோசனமில்லாமல் போற வேலை வேண்டியதில்லை" என்றும் ஒரு சிலர் பிள்ளைகளைப் பள்ளிக் கூடத்திற்கே அழைத்து வந்து திட்டவும், பேசவும் தலைப்பட்டார்கள்.

இந்த நிலையில் எங்கள் மனம் எவ்வாறிருக்கும் என்பதை நாங்கள் சொல்லித்தானு தெரிய வேண்டும்? இப்படிப்பட்ட உத்தியோகம் செய்து சம்பாதிக்கும்படி யார் சொன்னது என்றெண்ணும்படியாய் விட்டது. பிள்ளைகள் வராத கவலை ஓர்புறம், ஊரார் வேறு எங்களைத் திட்டுகிருர்களே அதற்குப் பதில் சொல்ல முடிய வில்லையே என்ற எண்ணம் ஓர்புறம்; இந்தச் சமயத்தில் அதிகாரிகள் யாராவது பிள்ளைகள் ஏன் இவ்வளவு குறைவு என்ருல் என்னசொல்வது என்ற பயம் மற்ருேர் புறம். இப்படி "ஊருக்கு ஒருபக்கம் இடி என்ருல், மத்தளத்திற்கு இருபக்கமும் இடி" என்ற மாதிரி நாங்கள் இடிபடவேண்டியதாயிற்று.

ஒருநாள் பஞ்சாயத்துத் தலைவர் அவர்களிடம் முறையிட்டோம். எங்கட்கு முன் ஊரார் முந்திக் கொண்டிருக்கிருர்கள். ஊர் மக்களின் முறையிடுதலுக்கிணங்கி 23-1-53ல் ஓர் அவசரக்கூட்டம்

கூட்டி கீழ்க்கண்ட தீர்மானம் நிறை வேற்றப் பட்டது.

தீர்மானம் :—1, தற்போது நமது சென்னை அரசாங்கத்தார் கொண்டுவந்துள்ள புதிய கல்வித் திட்டத்தின்படி பள்ளி நடத்தப் படுகிறது. இம்முறை ஆரம்பிக் கப்பட்டு இருவாரங்களே ஆனு லும், இதுவரை ஊரில்ஒவ்வொரு தினமும் இப்புதியகல்வித்திட்டத் தை எதிர்த்துப் பல ஆட்சேபனை கள் வந்து கொண்டிருக்கின்றன. பிள்ளைகள் பள்ளி நேரம் தவிர, மற்றநேரங்களில் பெற்றோர்க்கு எவ்வித ஒத்தாசையும் செய்யாது வீண் விளையாட்டுகள் விளையாடி யும், வீட்டிலும் பெற்றோர் களுக்குத் தொந்தரவும் செய் கிறார்கள். அதனால்பெற்றோர்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கு அழைத்து வந்து ஆசிரியர்கட்கு தொந்தரவு கொடுக்கிறார்கள். தவிரவும் இத்திட்டம் நம் அரசிய லார்எதிர்பார்ப்பதுபோலநன்மை கிடைக்காமல். படிக்கும் மாண வர்களையும், கிராம மக்களின் இதர நன்மைகளையும் பாதிக்கும். ஆதலால்,இத்திட்டத்தை கைவிடு மாறு அரசாங்கத்தை வேண்டிக் கொள்வதோடு பழைய திட்டப் படியே பள்ளி நடத்தவும் எல்லா மெம்பர்களாலும் ஏக மனதாகத் தீர்மானிக்கப்பட்டு அங்கீகரிக்கப் பட்டது.

இங்கல் முறைப்படி செங்கம் ரேஞ்சு டிபுடி இன்ஸ்பெக்டருக் கும், மற்றுமுள்ள ஆபீசர் கட் கும் அனுப்பப்பட்டது. பழைய திட்டப்படியே இனிப் பாடசாலை நடத்தப்படும் என்று எல்லாப் பொது மக்களுக்கும் கூறப்பட் டது. அன்றுமுதல் மாணவர் கள் இருவேளையும் தவருமல் வாத் தலைப்பட்டார்கள். ஆனல் இந்நிலை நீண்ட நாள் நீடிக்க வில்லை. சுமார் ஒரே வாரமே நடத்தப்பட்டது. அதற்குள் செங்கம் ரேஞ்சு டிபுடி இன்ஸ் பெக்டர் அவர்களிடமிருந்து கீழ்க் கண்ட பதில் கிடைத்து விட்டது.

R. C. No. 11 Pan 53 Dated 29-7-53.

Sir, தகவல்:— உமது 23-7-53 தேதி தீர்மானம் பார்வையிடப் பட்டது.

புதிய கல்வித் திட்டத்தின்படி தான் பாடசாலை நடக்க வேண் டும். அப்படி மீறி நடந்தால் பள்ளிக் கூடத்தின் அங்கீகாரம் ரத்து செய்ய சிபார்சு செய்யப் படும் என்பதை இதனுல் தங் களுக்கு அறிவிக்கப் படுகிறது. (மேற் கண்ட செய்தியை ப. போ. தலைவரின்அனுமதியுடனே வெளியிடுகிறேன்.)

(Sd)

எஸ். பழனிசாமி

டிப்புடி இன்ஸ் பெக்டர் ஆப் ஸ்கூல் 30–7–53 செங்கம் ரேஞ்.

1–8–53 முதல் மீண்டும் "பழைய குருடி கதவைத் திறடி" என்ற கதையாய் விட்டது. மீண்டும் புதிய திட்டப்படி ஆரம் பிக்கப் பட்டது. ஆகவே மாண

வர்கள் இன்னொருவன், நாளை யொருவன் என்று நாளடைவில் ஒவ்வொருவராக நின்று கொண்டே வருகிறார்கள். நாங்கள் ஒவ்வொரு வீடாக நாய் நுழைவது போல் நுழைந்து வசைமொழிகளை வாங்கி வர நேருகிறது. மாணவர்களின் தொகை உண்மையிலே குறைந்து விட்டது. இதிலே ஒரு ஆச்சரியம் என்னவென்றால், யாராவது அதிகாரிகள் வருகிறார்கள் என்று தெரிந்ததும் ஆசிரியர்கள் வீடுகளுக்கும் வயல்களுக்கும் சென்று பெற்றோர்களிடம் மன்றாடி, வரும் அதிகாரிகளுக்குப்பயந்து அன்று மட்டும் அனுப்பினால் போதும் என்று கெஞ்சி மாணவர்களை அழைத்து வந்து விடுகிறார்கள். இப்புதிய திட்டத்தினால் சாதாரணமாக எல்லாக் கிராமங்களிலுமே இம்முறை கையாளப்படுகிறது. ஏதோ சற்று நகரங்களின் அருகிலுள்ள கிராமங்களிலே மட்டும் திடீரென்று யாராவது வந்தால் என்ன பதில் சொல்வது என்று பயந்து சுமாராக நடத்தப்படுகிறது. அதுவும் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள்படிக்கும்பள்ளிகளிலேதான், சிறு கிராமங்களிலே அல்ல.

இப்படி மாற்றப்பட்ட (ஏமாற்றப்பட்ட) திட்டத்தினால் தீமை தவிர, நன்மை கிடையாது என்று எண்ணவேண்டியிருக்கிறது. நியாயத்திற்காக நியமிக்கப்பட்ட அந்த பருளேக்கர் கமிட்டி, இப்படி ஒரு செங்கம், திருவண்ணாமலை ஏதாவது ஒரு தாலுக்காவிற்கு வந்து ஆராய்ச்சி நடத்தியதுண்டா? படிப்பறியாத பாமரமக்கள் மிகுதியாக வாழும் இடங்களில் வந்து அவர்களின்கருத்தைஅறிந்ததுண்டா? சென்னை ஒரு பெரிய நகரம். ஆகவே அங்கு (அதைச் சுற்றியுள்ள இடங்களில்) சரியாகவும் நடத்தப்படலாம். (அதுவும் எங்களைப் போல முன் எச்சரிக்கை செய்யப்படும் காரணங்களால்) ஆகவே சென்னையை மட்டும் சுற்றிப் பார்த்துவிட்டால் போதுமா? அதைப் போலவே எல்லா இடங்களிலும் நடத்தப்படுமா? கல்வியில்லாதவர்கட்கெல்லாம் அறியாமையைப் போக்க கல்வி புகட்ட விரும்பும் அரசாங்கம், புதிய திட்டத்தால் தற்போதுள்ள பள்ளிகள் கட்டாயம் மூடப்படும் என்ற உண்மையை அறியுமா? பருளேக்கர் கமிட்டி நியமிக்கப்பட்டதன் அர்த்தம் பள்ளிகளை மூடுவதல்ல. பொது மக்களின் நன்மைகளுக்காக நில வொளியிலே நடக்கும் நிகழ்ச்சிகளை மட்டுமின்றி, இருளிலே, இருட்டறையிலே நடக்கும், நடத்தப்படும், உண்மைகளை அறிந்து, ஆராய்ந்து அதன்படி ஆவன செய்யுமா அரசாங்கம்?

புதிய ஆபத்து புறப்படுகிறது!

சுமத்தப்படுகிற வேலைப் பளுவோ ஏராளம். ஆனால், கொடுக்கப்படுகிற ஊதியத்தின் அளவோ மிகக் குறைவு.

சூட்டப்படுகிற புகழ்ச்சி மாலைகளோ கணக்கற்றவை. ஆனால், அளிக்கப்படுகிற செல்வாக்கின் தரமோ மிகவும் மட்டம்.

கொடுக்கப்படுகிற பட்டத்தின் பெயரோ எழுத்தறிவிக்கும் இறைவன். ஆனால், வாழும் இல்லத்தின் உண்மை நிலையோ, வறுமை – வாட்டம் – வேதனை– துயரம்!!

இப்படிப்பட்ட கொடிய நிலைக்கு உள்ளாகி உள்ளம் நொந்து உடலம் வாடி வாழ்க்கையும் வீணாகிக் கிடக்கிற ஆரம்ப ஆசிரியர்களுக்கு உருவான உதவி புரியவேண்டும் என்ற எண்ணமோ; அக்கறையோ ஆட்சியாளர்களுக்குத் துளியும் இல்லை. ஏனைய அதிகாரிகளிடமும் சிறிதளவும் காணோம். ஆனால், அதே நேரத்தில் ஆசிரியத் தோழர்களின் வேதனையை அதிகப்படுத்தும் செயலில் மட்டும் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு முனைந்து நிற்கின்றனர்.

முதல்வர் ஆச்சாரியார் கொண்டுவந்திருக்கிற புதிய திட்டத்தின் விளைவாக ஆசிரிய நண்பர்களுக்கு ஆபத்தின் மேல் ஆபத்துகள் அடுக்கடுக்காக வந்தபடி இருக்கின்றன.

புதிய திட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னால் ஆரம்ப ஆசிரியர்கள் நாள்தோறும் ஐந்து மணி நேரம் பணியாற்றி வந்தனர். ஆனால், இப்போதோ அவர்கள் தினசரி ஆறுமணி நேரம் தொழில் புரிந்து தீர வேண்டியிருக்கிறது. புதிய திட்டத்தின் விளைவாக ஆசிரியர்களுக்கு நேரிட்ட முதல் ஆபத்து இது.

திங்கள் முதல் வெள்ளி வரை உள்ள ஐந்து நாட்களும், சில இடங்களில் சனிக்கிழமை அரை நாளும் ஆக மொத்தம் ஐந்தரை நாட்களில் ஆசிரியர்கள் பணி புரியவேண்டி இருந்தது இதற்கு முன்னர். ஆனால் இப்போதோ அவர்கள் முழுமையாக ஆறு நாட்கள் பள்ளிக்கூடத்தில் கட்டுண்டு கிடக்கவேண்டி இருக்கிறது. ஆச்சாரியாரின் திட்டம் ஆசிரியர்களுக்குத் தந்துள்ள மற்றொரு "நன்கொடை" இது.

முன்னரெல்லாம் ஒரே ஒரு 'செட்' மாணவர்களை மட்டுமே தயாரிக்கவேண்டிய பொறுப்பு ஆசிரியர்களுக்குத் தரப்பட்டிருந்தது. இப்போதோ அவர்கள் இரண்டு 'செட்' மாணவர்களைத் தயாரித்துத் தீரவேண்டும். அன்பர் ராஜாஜி அளித்துள்ள அற்புதமான திட்டத்தின் இன்னுமோர் விளைவு இது.

"போதாத குறைக்குப் பொன்னியம்மாள் குறை" என்

பதுபோல, புதிய திட்டத்தின் காரணமாக ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள இத்தனை ஆபத்துக்களும் போதா என்றோ என்னவோ, இப்போது, மற்றுமோர் ஆபத்து வேக வேகமாக ஓடி வருகிறது.

கிராமப் பகுதிகளில் உள்ள ஆரம்ப ஆசிரியர்களில் சிலர், ஆசிரியத் தொழிலிலிருந்து அவர்களுக்குக் கிடைக்கிற ஊதியம் மிக மிகக் குறைவாக இருக்கிற காரணத்தால், ஆசிரியர்களாகப் பணி புரிகிற நேரம் போக மிச்சமுள்ள ஓய்வு நேரத்தில், உள்ளூர் அஞ்சல் நிலையத் தலைவர்களாகவும் அதாவது போஸ்மாஸ்டர்களாகவும் பணியாற்றி வருகிறார்கள். இப்படி அவர்கள் அஞ்சல் நிலையத் தலைவர்களாகவும் பணியாற்றி வருகிற காரணத்தால் அவர்களுடைய ஆசிரியத் தொழிலின் தரம் எந்த வகையிலும் குறைந்து விடுவது கிடையாது. அஞ்சல் நிலையத் தொழிலைக் கவனித்துக் கொள்கிற காரணத்தை முன்னிட்டு, ஆசிரியப் பணியில் காட்ட வேண்டிய ஊக்கத்தையோ உற்சாகத்தையோ அவர்கள் துளியளவும் குறைத்துக்கொள்வது இல்லை. கிராமப் பகுதிகளில் உள்ள மக்கள் என்றைக்கோ ஒரு நாள்தான் தபால் தலைகள் வாங்குவார்கள். அதுபோலவே, எப்போதோ ஒரு சமயம்தான் அவர்களுக்குக் கடிதங்கள் வரும். மணியார்டர்களும் அது போலவே அத்திபூத்தாற் போலத்தான் அபூர்வமாக வரும்; அபூர்வமாகப் போகும். எனவே அஞ்சல் நிலையத் தொழில் ஆசிரியர்களின் கவனத்தை அதிக நேரம் பறித்துக்கொள்வதற்கு வழியும் இல்லை. கிராமப்புற அஞ்சல் நிலையங்களை நடத்திச் செல்லும் பொறுப்பை ஏனைய கிராமவாசி எவரிடமாவது ஒப்படைப்பதைவிட அறிவும் அனுபவமும் மிகுந்த ஆரம்ப ஆசிரியர்களிடம் ஒப்படைப்பதுதான் சாலச் சிறந்தது என்பதையும் எவரும் மறுக்கமுடியாது. ஆரம்ப ஆசிரியர்களின் ஊதியக் குறைவு காரணமாக அவர்களுக்கு ஏற்பட்டுள்ள வேதனையையும் வாட்டத்தையும் ஓரளவு குறைக்கவும் இது ஒரு சிறந்த வழி. அஞ்சல் நிலையத்தை நடத்திச் செல்ல முழு நேரப் பணியாளராக ஒருவரை நியமித்தால் என்ன தவறு என்று சிலர் கேட்கக் கூடும். ஆனால், கிராமப்புற அஞ்சல் நிலையத் தலைவருக்குத் தரப்படுகிற மாத ஊதியம் மிக மிகக் குறைவானதாகையால் அந்த ஊதியத்தை மட்டுமே நம்பி முழுநேரப் பணியாளராக இருக்க யாரும் முன்வர மாட்டார்கள். அப்படியானால் ஒரு முழு நேரப் பணியாளருக்குத் தேவையான அளவு அஞ்சல் நிலைய ஊதியத்தை உயர்த்தினால் என்ன என்று சிலர் ஐயவினா எழுப்பக்கூடும். ஆனால், அப்படி உயர்த்துவது சாத்தியமான செய்கை அல்ல. ஒரு கிராமப்புற அஞ்சல் நிலையத்திலிருந்து ஒரு முழு நேரப் போஸ்ட் மாஸ்டரை

நியமிப்பதற்குத் தேவையான அளவு வருமானம் நிச்சயமாகக் கிடைக்காது.

இந்தக் காரணங்கள் எல்லாவற்றையும் நன்றாக அறிந்த காரணத்தால்தான், வெள்ளையர் ஆட்சி இந்த நாட்டில் நிலவிய காலத்தில், இயன்ற இடத்திலெல்லாம், ஆரம்ப ஆசிரியர்களையே கிராம அஞ்சல் நிலையத்தின் தலைவர்களாக நியமிக்கிற சிறந்த முறை, அவர்களால் கையாளப்பட்டது.

ஆரம்ப ஆசிரியர்களில் சிலருடைய துயரத்தை ஓரளவு குறைக்கிற இந்த நல்ல ஏற்பாட்டை ஒழித்துவிடவேண்டும் என்கிற தவறான முயற்சி ஒரு சிலரால் இப்போது தொடங்கப்பட்டிருக்கிறது.

சேலம் ஜில்லா போர்டினுடைய விசேஷ அதிகாரி ஜனவரி மாதம் 8-ம் தேதியன்று ஒரு புதிய உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார். அந்த உத்தரவின்படி, "அந்த ஜில்லா போர்டால் நடத்தப்படுகிற ஆரம்பப் பள்ளிகளின் ஆசிரியர்கள், அஞ்சல் நிலையத் தலைவர்களாக இருந்தால் அவர்கள் ஜனவரி மாதம் 22-ந் தேதிக்குள் அந்தப் பதவியை ராஜினாமா செய்துவிடவேண்டும். அப்படிச் செய்யவில்லையென்றால் அவர்கள் ஆசிரியப் பதவியிலிருந்து விலக்கப்படுவர்.

எதற்காக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதாம் தெரியுமா?

ஆச்சாரியாரின் புதிய திட்டத்தின் காரணமாக ஆசிரியர்களின் பள்ளி நேரமும் வேலையின் அளவும் உயர்ந்து விட்டனவாம். பள்ளிக்கூடப் பணி அதிகமாகி விட்ட இந்த நிலையில் அவர்களால் அஞ்சல் நிலையத் தலைவர்களாகவும் இருந்துகொண்டு அதே நேரத்தில் ஆசிரியத் தொழிலையும் சிறப்புடன் நடத்துவது இயலாத காரியமாம். எனவே அவர்கள், ஆசிரியத் தொழில் அல்லது அஞ்சல் நிலையப்பணி இரண்டில் ஒன்றை விட்டாகவேண்டுமாம்!

எப்படி இருக்கிறது விபரீதம்! புதிய திட்டத்தின் விளைவாக ஆசிரியர்களின் வேலை அதிகமாகிவிட்டால், அந்த அதிகப்படி வேலைக்கு ஏற்ற அதிகப்படி ஊதியத்தைத் தரும்படி அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டியது ஜில்லா போர்டின் கடமை. ஆனால், ஜில்லா போர்டோ அந்தக் கடமையைச் செய்யவில்லை. செய்யாதது மட்டுமல்ல, வேறொரு துறையின் மூலமாக ஆசிரியர்களுக்கு ஏற்கனவே கிடைத்துவந்த ஊதியத்தையும் ஒழித்துவிட முயல்கிறது.

இதுவா நீதி? இதன் பெயரா ஆசிரியர்களுக்கு உதவி செய்வது? இப்படிப்பட்ட செயல்களின் மூலமா ஆசிரியர்களின் வாழ்வு வளமாக முடியும்? கல்வியறிவைத் திக்கெட்டும் வளர்க்கும் ஆசிரியத் தோழர்களை இப்படியெல்லாம் வாட்டி வதைப்பதன் மூலமாகவா இந்த நாடு முன்னேற முடியும்?

நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் படைத்த யாரும் இத்தகு கேள்விகளைக் கேட்காமல் இருக்க முடியாது.

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியத் தோழர்களின் கிளர்ச்சி காரணமாகவும், சென்னை மாநில அஞ்சல் நிலையத் தலைமை அலுவலாளர்களின் தலையீடு காரணமாகவும், இந்த உத்தரவு, அது பிறப்பிக்கப்பட்ட இரண்டு வாரங்களுக்குப் பிறகு, நடைமுறைக்கு வராமல், தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறதே தவிர, உத்தரவு இன்னமும் முற்ற முடிய கைவிடப்படவில்லை.

அந்த உத்தரவு வாபீஸ் வாங்கப்பட்டாக வேண்டும் ஆசிரியர்களின் வேதனை அதிகம் ஆகாதிருக்கவேண்டுமானால்.

வாபீஸ் வாங்கும்படி செய்தாக வேண்டும் சென்னை அரசாங்கம், ஆசிரியர்களின் முன்னேற்றத்தில் அதற்கு அக்கறை இருப்பது உண்மையானால்.

சேலம் ஜில்லா போர்டினரே! அன்புகூர்ந்து சிந்தித்துப் பாருங்கள்! ஆசிரியர்களின் துயரம் இப்போதே கல்நெஞ்சையும் கரைக்கும் தன்மையதாக இருக்கிறது. இந்நிலையில், அதனை மேலும் அதிகப்படுத்துகிற ஓர் உத்தரவை நீங்கள் பிறப்பிக்க நினைக்கிறீர்களே, இது முறைதானா? தேவையான செயலா இது? இத்தகு தவறான பாதையில் நீங்கள் செல்லத்தான் வேண்டுமா? என்று கேட்கிறது நாடு. கேட்காமல் இருக்குமா?

“ஆரம்பக் கல்வி” ஆபீஸ்

94–95, புதுத் தெரு, மண்ணடி சென்னை–1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) **100 ரூ. 2–8**

ரிகார்ட் ஷீட்டுகள் (ஆங்கிலம்) **100 ரூ. 2–0**

பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள்(ஆங்கிலம்)**100 ரூ. 2–0**

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத்தாள்கள் (ஆங்கிலம்) **100 ரூ. 1–0**

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு (சரிபார்த்தனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) **100 ரூ. 2–0**

(தபால் செலவு உட்பட)

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல்
முன்பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

OFFICE OF THE DEPUTY INSPECTOR OF SCHOOLS G. T. RANGE MADRAS.

S. No. 464/53 dated 11-12-53.

SUB :—Elementary Education - Aided Schools - Termination of services of teachers - Certain instructions - Regarding.

Rule 13 (2) (iii) (be) of the Rules for Recognition of the Rules relating to elementary Schools contemplates three months' notice or three months' salary in lieu there of for certain reasons and repugnant to this rule certain managements it is seen, specify special conditions such as one or two months' notice on either side in the T. S. Rs of teachers. The Deputy Inspectors are requested to see and advice such managements not to stipulate such conditions as they are not in accordance with the rules.

SUB :—Elementary Education-Aided-Appointment of a peon in aided Higher Elementary Schools S. No. 452/53 dated 16-12-'53.

REF :—This office Pros. Rac. 647 E 2/53 dated 15-6-'53 and the replies of the Dist. Edl. officers in the divisions.

Pending standardisation of the items of income of expenditure of schools for purposes of maintenance grant, The District Educational officers are informed that they can admit the Pay and D. A. of peons employed in lower elementary Schools in compulsory areas with a strength of not less than 300 and higher elementary schools in all areas with a strength of over 200 for the above purpose.

R. C. No. 9/53 DATED 11-1-'54.

SUB :–Education–Matinee Cinema Shows on the School working days.

It has been brought to the notice of the Director that many pupils in the city schools cut classes in the afternoon session and attend matinee shows. The District Educational officer, Madras, is therefore requested to inform the managements of all schools in the city that the latter should exercise strict control over the pupils, to avoid irregular attendance in the afternoon session.

R. JANARDHANAM

Dy. I. G. T. Range.

மாணவர் மன்ற ஆண்டு விழாக் குழுவினர்

மாணவர் மன்றம் ஆண்டு விழா

(17–1–54)

சென்னை மாணவர் மன்றத்தின் 22–ம் ஆண்டு நிறைவு பரிசளிப்பு விழா ஞாயிறு மாலை கோகலே மண்டபத்தில், நீதிபதி டபிள்யூ எஸ். கிருஷ்ணசாமி நாயுடு தலைமையில் நடைபெற்றது.

அவ்வமயம் மறைந்த பேரறிஞர் டாக்டர் ஆர். கே. ஷண்முகம் செட்டியாரின் உருவப்படத்தை ராஜா சர். முத்தையா செட்டியார் திறந்து வைத்தார்.

காரியதரிசி திரு தணிகை உலக நாதன் திரு கிருஷ்ணஸ்வாமி நாயுடுவுக்கு வரவேற்பு இதழ் ஒன்றை வாசித்துக் கொடுத்தார். ராஜா முத்தையா செட்டியாருக்கு திரு மயிலை சிவமுத்து அவர்கள் வரவேற்புப் பத்திரத்தை வாசித்தளித்தார்.

நீதிபதி திரு கிருஷ்ணஸ்வாமி நாயுடு பேசுகையில் தமிழுக்கும், தமிழ் நாட்டுக்கும், தமிழ் மக்களுக்கும் மன்றம் செய்துவரும் அரிய சேவையைப் பாராட்டி, மன்றத்துக்குக் கட்டிடம் கட்ட அரசாங்கம் மனையை வழங்கி உதவும் என நம்புவதாகக் கூறினர்.

திரு கோ. வில்வபதி மன்றத்தின் ஆண்டு அறிக்கையை வாசித்தார். திரு மோகனசுந்தரம் ஆசிச் செய்திகளை வாசித்தார்.

காலஞ்சென்ற திரு ஷண்முகம் செட்டியாரின் உருவப்படத்தை பிறகு திரு எம். ஏ. முத்தையா செட்டியார் திறந்துவைத்தார். தமிழ் இலக்கியத்துக்குக் காலஞ்சென்ற டாக்டர் ஷண்முகம் செட்டியார் ஆற்றிய அரும்பணியை அவர் எடுத்துக்கூறி கல்வியின் தரம் தற்போது குன்றி வருவது வருந்தத்தக்கது என்றும், கல்வி பயில்விப்பதில் ஆசிரியர்கள் மேலும் ஊக்கம் காட்டவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

மன்றம் நிகழ்த்திய பல்வேறு வகைப்போட்டிகளில் பரிசுபெற்ற மாணவ மாணவியர்கட்கு நீதிபதி திரு கிருஷ்ணஸ்வாமி நாயுடு பரிசுகள் வழங்கினர்.

டாக்டர் எஸ். தர்மாம்பாள் வந்தனோபசாரம் கூறினர்

எவரெஸ்ட் வீரர் டென்சிங்!

"இமயமலையின் உச்சியை அடைவதா? அது யாரால் ஆகிற காரியம்?"

"மலையின் மீதா ஏறப் போகிறாய்? வேண்டாமப்பா இந்த வீண் முயற்சி! விட்டு விடு!"

"சிவபெருமான் வீற்றிருக்கிற இடமப்பா அது! அதனை அடையமுயல்பவரை ஆண்டவன் சும்மாவிட மாட்டார், ஜாக்கிரதை!"

"எத்தனையோ வெள்ளைக்காரர்கள் முயன்று பார்த்தனர்—முடியவில்லை—ஆனால் உன்னால் மட்டுமா முடிந்துவிடப் போகிறது இந்தக் காரியம்?"

இமயமலையின் உச்சியை அடைவதே தன் வாழ்க்கையின் இலட்சியம் என்று நெடுங்காலமாகக் கூறிவந்த நேபாள வீரர்—அஞ்சா நெஞ்சர்—டென்சிங் நார்கே என்பவரைப் பார்த்து, இப்படியெல்லாம் தான் கூறி வந்தனர் அவருடைய நண்பர்கள்.

இமயமலைத் தொடரில் உள்ள மலைகளில் மிகவும் உயர்ந்தது எவரெஸ்ட் சிகரம். அதன் உச்சியை அடைய சென்ற ஆண்டுக்கு முன்பு வரையில் எத்தனையோ நாட்டினர் முயன்றனர். முடியவில்லை. என்றாலும் அந்த முடியாத காரியத்தைத்தான் முடித்துத் தீர வேண்டும் என்று பேராவல் கொண்டிருந்தார் வீரர் டென்சிங். முடியாது என்று நம்பப்படுகிற காரியத்தை முடித்துக் காட்டுவதில் தானே எந்த மாவீரனின் சிறப்பும் அடங்கியிருக்கிறது!! டென்சிங், அந்த இலட்சியவாதிகளின் பரம்பரையைச் சேர்ந்தவர். ஆகவே தான் அவருக்கும் அந்த "முடிக்க முடியாத" காரியத்தின் மீதே ஆர்வம் அளவின்றிப் பதிந்து கிடந்தது.

பல முறை முயன்றார்—தோற்றார்—என்றாலும் மீண்டும் மீண்டும் முயன்றபடி இருந்தார்—இறுதியில் வெற்றி, அவருடைய காலடியில் வந்து தஞ்சமடைந்து நின்றது. சென்ற ஆண்டில் அவரும், ஹில்லேரி என்கிற வெள்ளையரும், எவரெஸ்ட் உச்சியை அடைந்து, அங்கே வெற்றிக் கொடியை நாட்டிவிட்டுத்தான் கீழே இறங்கினர்.

அத்தகு வெற்றி வீரரின் உருவத்தைத்தான் இந்த மாத "ஆரம்பக் கல்வி"யின் அட்டைப்படம் அலங்கரிக்கிறது.

வீரர் டென்சிங்கின் உருவத்தைப் பாருங்கள்—அத்தகைய இலட்சிய வெறியும், அஞ்சாத நெஞ்சமும், எடுத்த பணியை முடிக்கும் ஆர்வமும் ஒருவருக்கு இருந்தால், எந்தக் காரியத்தைத்தான் சாதிக்க முடியாது? நீங்களே கூறுங்கள்.

காலமும் கருத்தும்

வழிகாட்டுகிறது ஆந்திர நாடு!

அடுத்த பள்ளிக்கூட ஆண்டு முதல் புதிய கல்வித் திட்டம் நடைமுறையில் இருக்காது.

அதற்கு மாறாக எத்தகைய கல்வித் திட்டம் தேவை என்பதை அலசி ஆராய்ந்து ஒரு முடிவு கூறுவதற்காக அறிவும் அனுபவமும் மிகுந்த கல்வி நிபுணர்களைக் கொண்ட ஒரு குழு அரசாங்கத்தால் நியமிக்கப்படும்.

இந்தக் கல்வி நிபுணர் குழுவில் அரசாங்கம் நியமித்துள்ள உறுப்பினர்களைத் தவிர மேலும் எந்தெந்த நிபுணர்களை நியமிக்கலாம் என்பதைப் பற்றி ஆலோசனை கூறும்படி எதிர்க் கட்சிகள் எல்லாவற்றிற்கும் வேண்டுகோள் விடுக்கப்படும்.

அவர்கள் அளிக்கும் பெயர்ப் பட்டியல் கிடைத்ததும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிபுணர்களையும் கல்வித் திட்டக் குழுவின் உறுப்பினர்களாக அரசாங்கம் நியமிக்கும்.

இந்த விதமாகக் கல்விக் குழு அமைகிற காரணத்தால், அது, ஆளும் கட்சியின் அலங்காரப் பதுமையாக இல்லாமல், எல்லாக் கட்சிகளின் ஆதரவையும் பெற்றதாக அமையும்.

இந்த விதமாக அமைகிற சர்வ கட்சிக் கல்விக் குழு, தன்னுடைய அரிய ஆலோசனைகளுக்குப் பிறகு எத்தகைய திட்டத்தைச் சமர்ப்பிக்கிறதோ அந்தத் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்.

ஆரம்பக் கல்வித் திட்டத்தைப் பற்றி ஆந்திர மாநில அரசாங்கம் அண்மையில் செய்துள்ள முடிவுகள் இவை.

இத்தகு சிறந்த முடிவுகளை நேர்மை உணர்ச்சி படைத்த எவரும் நிச்சயம் பாராட்டியே தீரவேண்டும்.

ஒரு நாட்டின் கல்வித் திட்டம் எல்லாக் கட்சிகளின் ஆதரவையும் பெற்றதாக இருக்க வேண்டுமானால், அந்தத் திட்டம் இப்படிப்பட்ட முறையில் எல்லாக் கட்சியினரின் ஒத்துழைப்புடன் வகுக்கப்பட வேண்டும்.

இத்தகு, முறையில் திட்டம் வகுக்கப்பட்டால் அத்தகு திட்டத்திற்கு உருவான எதிர்ப்பு எதுவும் ஒரு நாளும் இருக்க முடியாது.

கல்விப் பிரச்சினையில் அரசியல் வேறுபாடுகளை நுழைக்கக்

கூடாது என்று நம் கல்வி அமைச்சர் சுப்ரமண்யனார் அடிக்கடி பேசி வருகிறாரே, அந்தப் பேச்சு வெறும் பேச்சாக இல்லாமல் நடைமுறை நாதமாக மாற வேண்டுமானால் ஆந்திர மாநில ஆட்சியாளர்கள் வகுத்துள்ள இந்த முறையையே சென்னை மாநில அரசாங்கம் பின்பற்றியாக வேண்டும்.

ஆனால்சென்னை அரசாங்கத்தின் முதல்வர் நண்பர் ஆச்சாரியார் இந்த முறையிலேயா தன் திட்டத்தை வகுத்தார் ?

நிச்சயமாக இல்லை.

அவர் தன் திட்டத்தை வெளியிடுவதற்கு முன்னால் எதிர்க் கட்சித் தலைவர்களையும் கலந்து பேசவில்லை. தன் சொந்தக் கட்சித் தோழர்களையும் கூப்பிட்டுக் கேட்கவில்லை.

கல்வி நிபுணர்களின் கருத்தை அறியவும் அவர் முயலவில்லை. ஆசிரியத் தோழர்களின் எண்ணத்தைத் தெரிந்துகொள்ளவும் அவர் ஆவல் கொள்ளவில்லை.

தான் ஒருவராகத் தனித்து நின்று சிந்தித்து, தன் மனம் போன போக்கில் உருவான ஒரு திட்டத்தை, தான் ஒருவராகவே வெளியிட்டு விட்டார்.

ஆகவேதான் எதிர்ப்பு புயலென எழுந்தது. எழுவதுதான் நியாயமுங்கூட.

ஆனால் இதோ ஆந்திர ஆட்சிப் பீடம் அருமையான வழியை வகுத்துத் தந்திருக்கிறது. இந்த வழியைப் பின்பற்றி, தன் சொந்தத் திட்டத்தை ஒதுக்கிவைத்து விட்டு, எல்லாக் கட்சியினரையும் கலந்து ஆலோசித்து, பல் வேறு கல்வி நிபுணர்களைக் கொண்ட ஒரு புதிய குழுவை அமைத்து, அதன் முடிவுகளுக்குக் கட்டுப்படுகிற உயர்ந்த நெறியை அன்பர் ஆச்சாரியார் ஒப்புக்கொள்ள முன் வந்தால் நாடு நலமடையும். கல்வித்துறை சிறப்புப் பெறும். மாணவ மணிகளின் குழப்பம் தீரும். ஆசிரிய நண்பர்களின் அல்லலும் குறையும்.

அருமையான ஏற்பாடு! அற்புதமான தொண்டு!

ஆம்! அப்படித்தான் சொல்லத் தோன்றுகிறது வேலூர் நகராட்சிக் கழகத்தின் சிறப்புள்ள பணி ஒன்றை எண்ணிப் பார்க்கும்போது!

அறிஞர் அண்ணாதுரை அவர்கள் காங்கிரஸ் கட்சியின் தவறுகளை எடுத்துக்காட்டி அந்தத் தவறுகளால் விளையும் ஆபத்துகளிலிருந்து நாடு மீளவேண்டும் என்பதற்காக அரும்பாடு பட்டு வருபவர்.

உத்கமர் காந்தியடிகள், தன்னுடைய வாழ்நாளின் பெரும் பகுதியை காங்கிரஸ் கட்சியின் சிறப்புக்கும் மேன்மைக்குமே செலவிட்டு மாண்டவர்.

எனவே காங்கிரஸ் கட்சியை ஆதரிப்பவரா அல்லது எதிர்ப்ப

வரா என்கிற ஒரே ஒரு கோணத்திலிருந்துமட்டும் பார்த்தால், இந்த இருவரும் இரு வேறு துருவங்கள், என்று கருத இடமிருக்கிறது.

என்றாலும், வேலூர் நகராட்சி மன்றம், தான் அமைத்துள்ள காந்தியடிகளின் உருவச் சிலையைத் திறந்து வைக்கும்படி அறிஞர் அண்ணாதுரைக்கு அன்பழைப்பு விடுத்தது. அந்த அன்பழைப்பை அண்ணா அவர்களும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு விழாவைச் சிறப்புடன் நடத்தி வைத்தார்கள்.

ஓர் அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் ஏனைய கட்சிகளில் உள்ளவர்களைத் தங்களுடைய பரம்பரைப் பகைவர்களாகக் கருதி வெறுத்து ஒதுக்குகிற தவருன நிலைமை, இந்த நாட்டில், தழைத்து ஓங்கி வளர்ந்து பெருகி இருக்கிறது. நம் நாடு நன்னிலை எய்த வேண்டுமானால், இந்த இழிநிலை ஒழிந்து, ஒவ்வொரு கட்சியில் இருப்பவர்களும், ஏனைய கட்சிகளில் உள்ளவர்களை கொள்கை அளவில் தங்களிடமிருந்து வேறுபட்டவர்களே தவிர, மற்றபடி தங்கள் நண்பர்கள்—தோழர்கள்—அண்ணன் தம்பிகள் என்று கருதுகிற நல்லுணர்ச்சி நாட்டில் வளர்ந்தாக வேண்டும். அத்தகைய அரசியல் நாகரிகமும் கண்ணிய உணர்ச்சியும் வளரவேண்டுமானால் வேலூரில் நடந்ததுபோன்ற சிறந்த நிகழ்ச்சிகள் நம் நாட்டில் அடிக்கடி நடந்துதீரவேண்டும்.

ஒருவருக்கொருவர் கொள்கையளவில் வேறுபாடு கொள்வது இயற்கை. அந்த வேறுபாட்டின் காரணமாக வெவ்வேறு கொள்கை படைத்தவர்கள் வெவ்வேறு கட்சிகளாக அமைவதும் நியாயம். தனித்தனிக் கட்சிகளாக அமைந்தவர்கள், தத்தமது கட்சிக்கென்று பொதுமக்களிடமிருந்து ஆதரவு திரட்ட ஆசைப்படுவதும் முறையான செயல்தான். அப்படி ஆதரவு திரட்ட ஆசைப்படுவதன் விளைவாக அக்கட்சிகளுக்கிடையே போட்டி ஏற்படுவதும் தவிர்க்க முடியாத நிகழ்ச்சியே ஆகும். ஆனால், கருத்து வேறுபாடு – கொள்கை வேறுபாடு – கட்சி வேறுபாடு என்னும் இவற்றின் காரணமாக ஒருவருக்கொருவர் காட்டவேண்டிய மரியாதையை, அன்பை, பற்றை, பாசத்தை மறக்க முயல்வது கண்ணியமும் அல்ல. நேர்மையும் ஆகாது. நல்லறிவாளர்கள் கடைப்பிடிக்கவேண்டிய காரியமும் அது அல்ல.

எனவேதான் இங்கிலாந்து போன்ற ஜனநாயக நாடுகளில் ஒரு கட்சியில் இருப்பவர்கள் ஏனைய கட்சிகளில் உள்ளவர்களை சமயம் நேரும்போதெல்லாம் தவருமல் பாராட்டுகிருர்கள். மறக்காமல் போற்றுகிருர்கள். மறைக்காமல் புகழ்ந்துரைக்கிருர்கள்.

இங்கிலாந்தை இப்போது ஆள்வது கன்சர்வேடிவ் கட்சி. அதன் ஆதிக்கத்தில்தான் இருக்கிறது லண்டன் நகரசபை.

கன்சர்வெடிவ் கட்சிக்கு நேர் எதிர்க்கட்சி, தொழிற்கட்சி. அதன் தலைவர்தான் தோழர் கிளமன்ட் அட்லி.

பாராளுமன்றம் கூடுகிற நேரங்களில் எல்லாம், அந்த மன்றத்தின் மூலம், கன்சர் வெடிவ் கட்சியினர் நடத்திவரும் அரசாங்கத்தின் தவறுகளை இடித்து இடித்துக் காட்டுவார் தோழர் அட்லி.

பொதுமக்களிடையேயும், கன்சர்வெடிவ் கட்சிக்கு எதிராகவும் தன்னுடைய கட்சிக்கு ஆதரவாகவும் ஓயாமல் பணி புரிந்து வருபவர் அந்தத் தொழிற் கட்சித் தலைவர்.

இதனை நன்றாக அறிவர் கன்சர்வெடிவ் கட்சியினர். அறிந்திருந்தும் கூட, அவர்கள், இரண்டு மாதங்களுக்கு முன்னால், தங்கள் ஆதிக்கத்தில் உள்ள லண்டன் நகரசபை மூலம், தோழர் அட்லிக்கு மகத்தானதோர் பாராட்டு விழா நடத்தி அவருடைய தனிப்பட்ட பண்புகளின் சிறப்பை எடுத்தெடுத்துக் கூறிப் பெருமகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள்.

அரசியல் துறையில் அவர் நம்முடைய தலை சிறந்த எதிரி. ஆனால் தனி மனிதர் என்கிற முறையில் அவர் நம்முடைய இணையற்ற நண்பர். ஆகவே அவரைப் பாராட்டுவோம் என்கிற உயர்ந்த பண்பாட்டைக் கையாண்டிருக்கிறார்கள் கன்சர்வெடிவ் கட்சியினர். ஆகவேதான் அவர்களால் தங்களுடைய நேர் எதிர்க் கட்சியின் தலைவராக இருப்பவரை வெளிப்படையாகப் பாராட்ட முடிந்தது.

கண்ணியப்போக்கும், நாகரிக உணர்ச்சியும், விட்டுக் கொடுக்கும் இயல்பும், சகிப்புத் தன்மையும் இங்கிலாந்தில் இந்த அளவுக்கு உயர்ந்து ஓங்கி நிமிர்ந்து நிற்கின்றன. எனவேதான் அந்த நாடும் சிறந்து வளர்ந்து செழித்து இருக்கிறது.

அத்தகு உயர்வும் சிறப்பும் நம்முடைய நாட்டுக்கும் ஏற்பட்டாக வேண்டுமானால் இங்குள்ள எல்லாக் கட்சியினரும் ஒருவரை ஒருவர் மதித்து நடக்கிற நற்பண்பு இங்கும் வளர்ந்தாக வேண்டும்.

வளரும்படி செய்கிறது வேலூரில் நடைபெற்ற சிலைத் திறப்பு விழா.

எனவேதான் அந்த விழாவின் வெற்றியைக் கண்டு நம் உள்ளம் களிக்கிறது.

சட்டம் சரி !
ஆனால், திட்டம் எங்கே ?

கவர்னரின் அவசரச் சட்டம் என்கிற முறையில் இரண்டு மாத காலத்திற்கு முன்னால் திடீரென்று பிறப்பிக்கப்பட்ட விவசாயக் கடன் ஒத்திவைப்புச் சட்டம், இந்த மாதத்தில், சென்னை சட்டசபையில் விவாதிக்கப்பட்டு, இறுதியில் நிறைவேற்றப்பட்டு, முறையான சட்டமாக மாறி

யிருக்கிறது. இந்த சட்டத்தின் படி விவசாயிகளுக்குக் கடன் கொடுத்தவர்கள், அந்தக் கடனை, ஓராண்டுக் காலம் வரையில் திருப்பி வாங்க முடியாது. கவர்னரின் அவசரச் சட்டமாக இருந்த நிலையில், இந்த சட்டம் எல்லா விவசாயிகளுக்கும் பொருந்துவதாக இருந்தது. ஆனால் இப்போதைய நிலையில், இது, வருமானவரி செலுத்தாத விவசாயிகளுக்கு மட்டும்தான் பொருந்தும்.

கொள்கையளவில் இந்த சட்டத்தை நாம் மனமார வரவேற்கிறோம்.

இந்த சட்டத்தால் இந்த நாட்டின் ஏழை விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய நன்மை துளியளவு தான் என்ற போதிலும் அந்தத் துளியளவு நன்மையாவது கிடைக்கிறதே என்கிற எண்ணத்தால் இந்த சட்டத்தை வரவேற்கிறோம் நாம்.

ஏழெட்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து மழை பெய்யாமல் வாடிக் கிடந்த தென்னாட்டில் இந்த ஆண்டுதான் ஓரளவு மழை பொழிந்திருக்கிறது. அப்படிப் பொழிந்த காரணத்தால் இந்த ஆண்டில் நல்லதோர் விளைவு இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அந்த விளைச்சலில் தங்களுடைய தேவைக்குப் போக மிச்சம் இருக்கக்கூடிய அளவை விற்றுப் பணமாக்கித் தங்களுடைய உழவுத் தொழிலில் ஏற்பட்டுள்ள சீர்கேட்டை ஓரளவு போக்கிக் கொள்ளும் வசதி ஏழை விவசாயிகளுக்கு இந்த ஆண்டில் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அந்த விவசாயிகளுக்கு இந்த ஆண்டில் நல்ல விளைச்சல் கிடைத்திருக்கிறது என்பதை அறிந்ததும், அந்த விவசாயிகளுக்குக் கடன் கொடுத்தவர்கள், இதுதான் சமயம் என்று நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து, இந்த ஆண்டின் விளைச்சல் முழுவதையும் அவர்கள் தரவேண்டிய கடனுக்கு ஈடாகப் பறித்துக் கொள்ள முந்துவார்கள். அப்படிப்பட்ட நிலைமை நேரிட இடம் கொடுத்து விட்டால், இந்த ஆண்டின் விளைச்சலையும் இழந்து, ஏழை விவசாயிகள் தத்தளிக்க வேண்டி வரும். ஆனால் அவர்களுக்குச் சிறிதளவு அவகாசம் தந்தால், அவர்கள், தங்கள் நிலைமையைச் சிறிது சிறிதாகச் சீர்படுத்திக் கொண்டு, அடுத்த ஆண்டில், தங்களுடைய கடன் தொகையை எளிதில் திருப்பித்தர முயற்சி செய்வர். எனவேதான் ஓராண்டுக் கால அவகாசத்தை இந்தச் சட்டம் அவர்களுக்குத் தருகிறது என்று விளக்கம் தந்திருக்கிறது சென்னை அமைச்சர் அவை.

உண்மைதான். இந்தச் சட்டத்தின் விளைவாக ஓராண்டுக் காலம் வரை கடன் கொடுத்தவர்களின் மிரட்டலும் உருட்டலும் விவசாயிகளைத் தாக்காமல் இருக்கும் என்பது மெய்தான். ஆனால் இந்த சட்டம் விவசாயிகளின் கடனை ஓராண்டுக் காலம் வரை

ஒத்திவைக்கிறதே தவிர அதனை ஒழிப்பதற்குரிய வழிகளை வகுக்கவில்லை.

விவசாயிகள் ஏன் அடிக்கடி கடன்படவேண்டிய நெருக்கடி ஏற்படுகிறது என்பதை அரசாங்கம் கண்டறிய வேண்டும். கண்டறிந்து அந்த மூல நோயைப் போக்குவதற்கான திட்டங்களைத் தீட்டி நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும்.

விவசாயிகள் மீண்டும் மீண்டும் கடன்வாங்கித் தீரவேண்டிய சங்கடமான நிலைமை இன்றைய தினம் இருக்கிறது. இத்தகு நிலைமையை அடியோடு அழித்து ஒழிப்பதற்குத் தேவையான சிறந்த திட்டங்களைச் சீரிய முறையில் வகுக்காமல், இந்த ஆண்டில் தரப்படவேண்டிய கடனை அடுத்த ஆண்டில் தரலாம் என்று ஓர் ஏற்பாட்டைச் செய்வதனால் மட்டும், விவசாயிகளுக்கு நிரந்தரமான பலன் எதுவும் ஏற்பட்டு விடமுடியாது.

இருமல் நோயால் அவதிப்படுபவனை அந்த அவதியிலிருந்து ஓராண்டுக் காலம் வரை காப்பாற்றுவது ஒரு வகை மருத்துவ முறை.

ஆனால் அந்த நோயே அவனை என்றென்றும் அணுகமுடியாத படி அடிப்படையையே கல்லியெறிவது மற்றொரு முறை.

இந்த இரண்டாவது முறை தான் சிறந்த முறை. ஏனெனில், அதுதான், நோயாளியை, நோயாளி என்கிற நிலையிலிருந்து, நோயற்ற நல் உடலான் என்கிற நிலைக்கு உயர்த்துகிறது.

ஆனால் முதல் முறையோ நோயாளிக்கு ஓராண்டுக் காலப் பாதுகாப்பு மட்டும்தான் தருகிறது.

ஆம்! இரண்டாவது முறை நிரந்தர முறை. ஆனால் முதல் முறையோ தற்காலிக முறை தான்.

இப்போது நிறைவேற்றப்பட்டிருக்கிற கடன் ஒத்திவைப்புச் சட்டம் முதல் முறையைப் போன்றது. வெறும் தற்காலிகப் பரிகாரம் அது! ஆனால் அது போதாது விவசாயிகளின் வேதனையை இல்லாமல் செய்ய! தேவைப்படுவது ஒரு நிரந்தரப் பரிகாரம்!

தற்காலிக நிவாரணம் தரும் இந்த சட்டம் நிறைவேறிய அளவில் நமக்குத் திருப்தி தான். ஆனால் நிரந்தரப் பரிகாரம் தேடுவதற்கான திட்டம் எங்கே? அது தான் நம் கேள்வி. நம் கேள்வி மட்டுமா? ஏழை விவசாயிகளின் இதயக் குமுறலும் அதுவே தான்!

செய்திச் சுருள்

சென்னை மாநிலப் பஞ்சாயத்தாரர்கள் மாநாடு, ஜனவரி 29, 30 ஆகிய இருநாட்களிலும் சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது. நிலவரி வசூலில் எட்டில் ஒரு பகுதியைப் பஞ்சாயத்துப் போர்டுகளின் செலவுக்காக ஒதுக்க வேண்டுமென்றும், மதுவிலக்கு வழக்குகளில் விதிக்கப்படும் அபராதத் தொகையில் பாதி அளவும் அதுபோலவே பஞ்சாயத்துகளுக்குத் தரப்பட வேண்டுமென்றும், இரண்டாந்தரப் பஞ்சாயத்துக்கான தேர்தல்களும் முதல் தரப் பஞ்சாயத்துகளைப் போலவே ரகசிய வோட்டு முறைமூலம் நடத்தப்பட அரசாங்கம் அனுமதிக்க வேண்டுமென்றும் வற்புறுத்தித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முதல் நாள் மாநாட்டின்போது சென்னை அரசாங்கக் கல்வி ஆலோசகர் திரு. ஜி. இராமச்சந்திரன் அவர்கள், ஆச்சாரியாரின் கல்வித் திட்டத்தை ஆதரித்துப் பேச முயன்றபோது, மாநாட்டிற் கூடியிருந்த பிரதிநிதிகளில் மிகப் பெரும்பான்மையோர் அதனை ஆட்சேபிக்கவே, அவர் தன் முயற்சியைக் கைவிட்டு ஒதுங்கினர்.

* * *

ஒவ்வோர் ஆண்டிலும் குறிப்பிட்ட ஒரு கால அளவுக்காவது, இந்தியப் பாராளுமன்றத்தின் கூட்டங்கள், தென்னிந்தியாவில் நடைபெறவேண்டும் என்கிற ஓர் ஆலோசனை டில்லி அதிகார வட்டாரத்தில் உலவி வருகிறதாம். வட இந்தியாவுக்கும் தென்னிந்தியாவுக்கு மிடையே உள்ள உறவை வலுப்படுத்துவதற்காகவே இந்த ஏற்பாடு என்று சொல்லப்படுகிறது.

* * *

திருச்சிக்கு அருகே உள்ள கல்லக்குடி என்னும் ஊரின் அஞ்சல் நிலையமும் ரயில்வே நிலையமும் டால்மியாபுரம் என்ற பெயருடன் அழைக்கப்படுவதைமாற்றி கல்லக்குடி என்றே அழைக்க வேண்டும் என்பதற்காக ஒரு பெருங் கிளர்ச்சி தமிழ் நாட்டில் தொடங்கப்பட்டதல்லவா? அந்தக் கிளர்ச்சியில் ஈடுபட்டு ரயில்களை நிறுத்திய காரணத்திற்காகக் கவிஞர் கண்ணதாசன் முதலிய 17 பேருக்கு ஒன்றரை ஆண்டுக் கடுங்காவலும் ஏனைய 5 பேருக்கு ஓராண்டுத் தண்டனையும் விதிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தின் இந்தப் போக்கைக் கண்டித்தும், உடனே இவர்கள் அனைவரையும் நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும் என்று வற்புறுத்தியும் தமிழ் நாட்டில் பல பொதுக் கூட்டங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

* * *

ரேடியோக்கள், கடிகாரங்கள், பேனாக்கள் முதலிய பல கருவி

களை மிகக் குறைந்த செலவில் தமிழ் நாட்டில் உற்பத்தி செய்ய முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கிறார் ஜி. டி. நாயுடு. என்றாலும் இவற்றை ஆயிரக் கணக்கில் உற்பத்தி செய்து, அப்படிச் செய்வதன் மூலமாக இங்கிருந்து பிற நாடுகளுக்குச் செல்லும் பணத்தை இங்கேயே நிறுத்தத் தான் செய்யும் முயற்சிகளுக்குச் சிறிதளவும் ஆதரவு காட்ட மறுக்கிறது இந்திய அரசாங்கம் என்கிறார் ஜி. டி. நாயுடு. இதனைக் கண்டிக்கும் அறிகுறியாக, அவர் சென்னையில், ஜனவரி 30-ம் நாளன்று நடத்தப்பட்ட ஒரு மாபெரும் பொதுக்கூட்டத்தில் இந்தக் கருவிகள் அத்தனையையும் தூள் தூளாக உடைத்தெறிந்தார்.

* * *

ஜனவரி 23-ம் நாளன்று புத்தர் கொள்கை ஆதரிப்பு மாநாடும், மறுநாளன்று, புதிய கல்வித் திட்ட எதிர்ப்பு மாநாடும், ஈரோட்டில், பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் முயற்சியால் சிறப்பாக நடத்தப்பட்டிருக்கின்றன. புத்தர் கொள்கை மாநாட்டிற்கு இலங்கைப் பல்கலைக் கழகத்தின் புத்தமதப் பேராசிரியர் மல்லலசேகரர் அவர்கள் தலைமை வகித்து, புத்தமதக் கொள்கைகள், ஜாதி வேற்றுமையைத் தகர்த்து எறியவல்லன என்பதை விளக்கி விரிவுரையாற்றினார். அனைத்திந்திய தாழ்த்தப்பட்டோர் பெடரேஷனின் செயலாளர் திரு ராஜ்போஜ் அவர்கள் மாநாட்டைத் திறந்து வைத்தார். கல்வித் திட்ட எதிர்ப்பு மாநாட்டிற்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தரும், தலை சிறந்த கல்வி நிபுணருமாகிய **டாக்டர் மணவாள ராமாநுஜம் அவர்கள்** தலைமை வகித்தார். புதிய திட்டம் எவ்வளவு சீர் கேடானது என்பதை அவருடைய தலைமையுரை அக்கு வேறு ஆணி வேறாக அலசிக் காட்டியிருக்கிறது.

* * *

சென்ற மாதத்தில் நடைபெற்ற சட்டசபை காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில், புதிய கல்வித் திட்டத்தை உடனே வாபீஸ் வாங்கவேண்டுமென்று காங்கிரஸ் தலைவர் காமராஜர் அவர்களும், மற்றும் பல எண்ணற்ற காங்கிரஸ் எம். எல். ஏக்களும் வற்புறுத்திக் கூறினார்கள் என்றும், ஆச்சாரியாரின் திட்டத்திற்கு காங்கிரஸ் எம். எல். ஏக்களிடையே மிகவும் கடுமையான எதிர்ப்பு இருக்கிறது என்றும், "பேரிகை" முதலிய காங்கிரஸ் ஏடுகள் தெரிவிக்கின்றன.

* * *

அனைத்திந்திய காங்கிரசின் 59 வது மாநாடு, வங்காள மாநிலத்தைச் சேர்ந்த கல்யாணி என்னும் இடத்தில் ஜனவரித் திங்கள் மூன்றாவது வாரத்தில் நடைபெற்றது. பண்டித நேரு தலைமை வகித்தார்.

* * *

பீகார் வட்டாரத்தைச் சேர்ந்த ஜங்கிநந்தன் சிங் என்னும் காங்

கிரஸ் தலைவரும் மற்றும் 64 காங்கிரஸ் முக்கியஸ்தர்களும், அவர்கள் கல்யாணியிற்கூடும் காங்கிரஸ் மாநாட்டிற்குப் போய்க் கொண்டிருக்கும் வழியில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். தனி மிதிலை மாகாணம் தேவை என்று கிளர்ச்சி செய்தனர் என்பதே அவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கிற குற்றமாம். காங்கிரஸ் மாநாடு கூடுகிற நேரத்தில் காங்கிரஸ் தலைவர்கள் கைது செய்யப்பட்டிருப்பது கண்டு பீகார் காங்கிரஸ் வட்டாரம் பெரிதும் அதிருப்தி அடைந்திருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

*   *   *

அண்மையில் உள்ள இலங்கையில் எட்டு லட்சம் இந்தியர்கள் வாழ்ந்து வருகிறார்கள் அல்லவா? இவர்களின் எதிர்காலத்தைப்பற்றி, இந்திய முதலமைச்சர் பண்டித நேருவுக்கும் இலங்கை முதலமைச்சர் சர் ஜான் கொத்தலவாலைக்குமிடையே ஜனவரி 18-ம் நாளன்று, டில்லியில் ஓர் ஒப்பந்தம் கையெழுத்தாகியது. இந்த ஒப்பந்தத்தின்படி, இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள், இலங்கைப் பிரஜா உரிமைச் சட்டப்படி இலங்கை இந்தியர்களுள் எவ்வளவு பேர்களுக்கு பிரஜா உரிமை கிடைக்குமோ அவ்வளவு பேர்களுக்கும் உரிமையைத் தரவேண்டும் இலங்கை ஆட்சி. இவ்வாறு உரிமையைப் பெறுகிற இலங்கை இந்தியர்களின் பெயர்கள், இலங்கைப் பிரஜைகளின் வாக்காளர் பட்டியலில் இணைக்கப்படாமல், தனியாக ஒரு வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்படும். இலங்கையில் உள்ள எந்த ஒரு தேர்தல் தொகுதியிலாவது, இப்படிப் பதிவு செய்யப்படும் இலங்கை இந்தியர்களின் தொகை 250-க்குக் குறைவாக இருந்தால், அவர்கள், பொதுப் பட்டியலிலே சேர்க்கப்படுவர். இல்லையானால் அவர்களுக்கென்று தனித் தொகுதி அளிக்கப்படும். இலங்கைப் பாராளுமன்றத்தில் இலங்கை இந்தியர்களுக்காக மொத்தம் எத்தனை தனித் தொகுதிகள் தருவது என்பதை, விரைவில், இலங்கை முதல்வர், இந்திய முதல்வருடன் கலந்து முடிவு செய்வார்.

*   *   *

மர்ம மனிதர் என்றும், பேரறிவுப் பெருநிதி என்றும், பகுத்தறிவு ஒளிச் சுடர் என்றும் புகழப்பட்ட அறிஞர் எம். என். ராய் ஜனவரி 25-ம் நாளன்று மரணமடைந்தார். பத்து வயதிலேயே பொது வாழ்வில் குதித்தவராய், பதினேழு மொழிகளில் புலமை படைத்தவர். ஜெர்மன், ரஷ்யன், ஆங்கிலம், பிரஞ்சு ஆகிய நான்கு மொழிகளில் நூல்கள் இயற்றியவர். லெனின், ஸ்டாலின், டிராட்ஸ்கி ஆகியவர்களுடன் இணைந்து நின்று பொதுவுடைமைப் பணி புரிந்தவர். ராடிகல் ஹூமனிஸ்ட் என்கிற ஆங்கிலக் கிழமை இதழுக்கும்,

(54-ம் பக்கம் பார்க்க)

நீண்டகாலம் வாழவேண்டுமா ?

[T. A. சந்தக்குரூஸ்—கூத்தென்கழி]

பாலர் முதல் பழுத்த கிழம் வரை யாவரும் நீண்டகாலம் வாழவே விரும்புவர். இதனாலன்றோ நாம் ஆழி கடந்து செல்வம் திரட்டுவதும், ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்துவதும், ஆயிரமாயிரம் தொழில்கள் நடாத்துவதும். நீண்ட காலம் வாழ்ந்து இறந்தவர்கள் அநேகர். ஆயினும் உலகப் புள்ளி விவரக் கணக்குப்படி நம் பாரத மக்களின் ஆயுட்காலம் மிகக் குறுகிய அளவாகவே இருக்கிறது. சுகதேகிகளே நீண்டகாலம் வாழ முடியும் என்பது பலரது கருத்து. அநேகர், செல்வவான்களே நீண்டகாலம் ஜீவித்திருப்பர் என்று எண்ணுகின்றனர். ஏழைகளும் செல்வவான்களை விட அதிக நாட்கள் ஜீவித்திருக்கின்றார்களே! அதன் காரணம் என்ன! காரணங்கள் பலவுண்டு. ஆயினும் அவற்றுள் முக்கியமாய்க் கவனிக்கத் தக்கவை உணவு, உறக்கம், உழைப்பு, உல்லாசம் ஆகிய நான்குமாகும்.

1. **உணவு** :—நாம் சாப்பிடும் உணவு சத்துள்ளதாயும், சரியாய்ப் பக்குவப்படுத்தப்பட்டதாயுமிருக்கவேண்டும். காலத்திற்கும், இடத்திற்கும், உடலுக்கும் ஏற்றதாயிருக்க வேண்டும். 'நொறுங்கத் தின்றால் நூறு வயது' என்பதற்கொப்ப நமது ஆகாரங்களை நன்கு மென்று தின்ன வேண்டும். அடிக்கடி உணவு கொள்ளாது, பசித்த போதே புசித்தல் நல்லது. குறைந்த பட்சம் இருவேளை உணவுகளுக்கிடையில் $3\frac{1}{2}$ மணி நேரமாவது இருத்தல் வேண்டும். தினசரி வேலை செய்துகொண்டிருக்கும் குடல்கள் இளைப்பாறவும், அசுத்தங்கள் நீக்கப்படவும் வாரத்தில் அல்லது மாதத்தில் ஒரு நாள் உணவு அருந்தாமலிருந்து வரலாம்.

2. **உறக்கம்** :— தினந்தோறும் தத்தம் தொழில்களைச் செய்து வரும் தேக உறுப்புக்கள் தேய்வடைந்து சோர்வடைவதால், அவைகள் தத்தம் தொழில்களை நிறைவேற்றச் சக்தியற்றுப் போகின்றன. இச்சமயத்தில் ஜீவ சத்துக்களுக்கு நித்

(53-ம் பக்கத் தொடர்ச்சி)

யூமனிஸ்ட்வே என்கிற முத்திங்கள் முறை ஆங்கில இதழுக்கும் ஆசிரியராக இருந்தவர். பரந்த உலக அறிவும், விஞ்ஞானப் புலமையும், வரலாற்றுப் பயிற்சியும் வாய்க்கப்பெற்றவர். ராடிகல் டிமாக்ரடிக் கட்சியின் தலைவர். காங்கிரஸ் கட்சியிலும் சில காலம் இருந்தவர். இந்தியத் துணைக் கண்டத்திற்குச் சிறந்ததொரு பொருளாதாரத் திட்டத்தை "பீபிள்ஸ் பிளான்" — மக்கள் திட்டம் என்கிற பெயரில் உருவாக்கியவர்.

திரை மயக்கம் உண்டாகி, அவைகள் தம் தம் முயற்சிகளைவிட்டு ஓய்ந்து இளைப்பாறும். அச்சமயத்தில் உறுப்புக்களில் உண்டான தேய்வை ஈடுபண்ணப் புதிய பதார்த்தங்கள் சேர்வதால் அவைகள் முன்போல நன்னிலையும், பலமும் அடைந்து பின்னும் தம் தொழில்களைச் செய்யவல்ல சக்தியைப் பெறுகின்றன. நல்ல உறக்கவேளையில்தான் ஆகாரத்தின் சத்துக்கள் சரியானபடி உடலில் சேர்ந்து தேகத்தை வளரச் செய்யும். நல்ல நித்திரை ஆயுளைப் பெருகச் செய்யும். முன் இரவில் படுக்கைக்குச் சென்று அதிகாலையில் எழுந்திருப்பது சுகத்தையும், விவேகத்தையும், முயற்சியையும் உண்டாக்கும். பகலில் தேகாப்பியாசம் செய்தலும், தூங்காதிருத்தலும் இரவில் நல்ல நித்திரையை அளிக்கும். பாலர்கள் தினசரி 10 மணி நேரமும், பெரியவர்கள் 8 மணி நேரமும் நித்திரை கொள்ள வேண்டும். இராச் சாப்பாடு படுக்கை நேரத்திற்கு இரண்டு மணிக்கு முன்னமே ஆகியிருத்தல் நலம். தவிர, சுத்தமான காற்று படுக்கையறையில் உலவி வரும்படிச் செய்யவேண்டும். நல்ல நித்திரை, கோபம், சோம்பல் முதலிய துர்க்குணங்களைப் போக்கி, நிதானம், முன்யோசனை முதலிய நற்குணங்களை வளர்க்கும்.

3. உழைப்பு:—நாம் ஒவ்வொருவரும் உழைத்தே உயிர் வாழ வேண்டியவர்களாயிருக்கிறோம். உழைத்தால்தான் ஊதியம் பெறலாம். ஊதியமே உல்லாசமாய் வாழச் செய்யும். நாம் தினசரி 8 மணி நேரமாவது உழைத்தல் வேண்டும். உழைக்கும் உடம்பின் ஒவ்வொரு அங்கமும் கையாளப்பட்டுச் சரியான இரத்த ஓட்டம் ஏற்படுவதால் உடல் திடப்படுகிறது.

4. உல்லாசம்: — கடின உழைப்பாலும், வறுமை, பிணி, குடும்பச் சச்சரவுகளினாலும் நாம் சஞ்சலத்திற்குள்ளாகிறோம். மனம் சஞ்சலமடைந்தால் நம் உடலும் யாதொரு தொழிலும் செய்ய முன்வருவதில்லை. ஆதலால் இவ்வித சந்தர்ப்பங்களில் சிறிது தூரம் நடந்துசென்று உலாவி வருதலும், கேளிக்கை, மனச் சந்தோஷம் நிரம்பிய நாடகங்கள், கூத்து, சினிமாக்கள் முதலிய காட்சிகளையநுபவித்தும் நமது மனதைத் திருப்தி செய்யலாம். பிறர் மனத்தைப் புண்படுத்தாமல் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலுள்ள நகைச்சுவையை உணர்ந்து அநுபவிப்பது மிகவும் விசேஷமான குணம். மன நிம்மதியின்மை, பொறுமை, கோபம் ஆகியவை மனிதனை எவ்வளவுக்குஅவலக்ஷணப்படுத்துகிறது என்பதைச் சூதாடுபவர், திருடுபவர், வம்பு செய்வோர் முகத்தைப் பார்த்தால் விளங்கும். உண்மையான அழகை் தூய இருதயமுடையவர்கள், அன்பு கனிந்த புதிய தம்பதிகள், பாவமறியாப் பாலகர்கள் ஆகியவர்கள் முகத்தில் காணலாம். சிறந்த

நகைச்சுவை இனிய இளமைக்கு ஏற்ற ஔஷதம்.

இன்னும் இதுவன்றி நமக்கு ஏற்படும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளிலும் மனந் தளராது தைரியங் கொண்டவர்களாயிருக்க வேண்டும். மலைபோல் வரினும் மனந் தளராது மகிழ்ச்சியே மனத்தில் மண்டியிடச் செய்ய வேண்டும். வாழ்க்கையின் பாதையில் நம்பிக்கையுடன் நடந்துசெல்ல வேண் வேண்டும். நம்பிக்கை நம் பலத்தை அதிகரிக்கச் செய்யும். ஆதலால் உடலென்னும் ரதத்தில் அமைந்துள்ள உயிர் என்னுங் கோவை, உணவு, உறக்கம், உழைப்பு, உல்லாசம் என்னும் இருஜோடி பரிகள் பூட்டி நம்பிக்கை என்னும் பாதையில் நகை என்னும் சாட்டையால் ஓட்டி நீண்டநாள் இந்நில உலகில் பயணம் செய்வோமாக.

(போதனா விஷய பூங்கொத்து)

CONNEMARA PUBLIC LIBRARY
11 JAN 1956

சில ருசிகரமான விஷயங்கள்

(தென்னாப்பிரிகா – டர்பன் – திரு. ச. மு. பிள்ளை அவர்கள்)

வாழ்க்கையைப் பற்றி.

வாழ்க்கை	...	ஒரு கனவு — கால்டெரான்.
,,	...	ஒரு கோட்டை — நெப்போலியன்.
,,	...	ஒரு ஜோதி — பெர்னார்ட் ஷா.
,,	...	ஒரு ஏணி — ரிச்சார்ட் பாட்டன்.
,,	...	ஒரு தாமாஷ் — ஜான்கே.
,,	...	ஒரு தீயிறுதி நாடகம் — ஸ்விப்ட்.
,,	...	ஒரு கட்டுக் கதை — ஆண்டர்சன்.
,,	...	ஒரு புகை மாதிரி — ஹென்லி.

Edited, Printed and Published. by P. Veeraraghavan at the 'Venkatesan Press' 94/95, New St. Mannady Madras—1.